விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 20 ஞாயிற்றுக்கிழமை (06.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில்

# இனப்படுகொலைக்கு பதில் வேண்டும்

## இல்லையேல் இலங்கைக்கு ஆபத்து; ஏபி சுட்டிக்காட்டு

(நியூயோர்க்)

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்காண தமிழ் மக்களின் கொலைகள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பதிலளிக்கப்படாமல் போனால் ஐ.நா. நிபுணர்குழுவின் பரிந்துரைக்கு அமைய சர்வதேச விசாரணைகளுக்கான அழுத்தங்கள் அதிகரிக்கும். இவ்வாறு சர்வதேச செய்தி நிறுவனமான அசோசியேட்டட் பிரஸ் (ஏபி) சுட்டிக்காட்டியுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தயார் நிலையில்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தயார் செய்யப்பட்டுவிட்டதாக அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் நாளை திங்கட்கிழமைக்கு பின்னர் எந்த ஒரு நேரத்திலும் அந்த அறிக்கையானது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான நடவடிக்கையின் முழுமையான மற்றும் யுத்த கால நிகழ்வுகள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்பினரிடமிருந்தும் பெறப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணை, அரசியல் தீர்வில் இலங்கை அரசுக்கு அக்கறை இல்லை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்து இலங்கை அரசாங்கம் உரிய வகையில் கவனம் கொள்ளவில்லை என்பதை அமெரிக்க உயர் அதிகாரிகளிடம் எடுத்திக் கூறியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் இருந்து ஏபி செய்தி நிறுவனத்திற்கு தொலைபேசி ஊடாக வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க (20ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸூடன் விபத்து முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும்–துவிச்சக்கர வண்டியும் விபத்திற்குள்ளானதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் புத்தூர்ச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த கோப்பாய் வடக்கைச் சேர்ந்த எம்.ஸ்ரீசோமஸ்கந்தமூர்த்தி (வயது 60) என்ற முதியவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.பசுபிக் கட்டளை அதிகாரி இலங்கைக்கு திடீர் விஜயம்

(நியூயோர்க்)

அமெரிக்கப் படைகளின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் பிரதிப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கொனன்ற் இலங்கைக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை அவர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

தற்போதைய மற்றும் எதிர்கால இராணுவத் திட்டங்கள் குறித்தும் அதற்கு பசுபிக் கட்டளைப் பீடம் எவ்வாறு உதவிகளை வழங்கலாம் என்பது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இந்தச் சந்திப்பில் பசுபிக் கட்டளைப் பீடத்தில் இலங்கை விவகாரங்களை கையாளும் அதிகாரி லெப்.கேணல் ஜேர்னிகன், அமெரிக்க தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் சூலர், பாதுகாப்புக்கான பிரதி உதவிச் செயலர் றொபேட் ஸ்கேர் (20ஆம் பக்கம் பார்க்க)

## செய்தி இணையங்கள் பதிவு செய்வது அவசியம்

(கொழும்பு)

இலங்கையிலோ அல்லது இலங்கை மக்கள் தொடர்பிலோ செய்தி வெளியிடும் சகல இணையத் தளங்களும் விரைவாக தகவல் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளரது கையொப்பத்துடன் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக தகவல்களை 0112-513-943 (20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட




SINGER POWER ஜெனரேட்டர்கள்

இன்றே விரையுங்கள்.

Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

சங்கானை 077 2208232

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389

சுன்னாகம். 021 224 0555

நெல்லியடி. 021 226 4937

மானிப்பாய். 021 225 5343

சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் பிற்போடப்பட்டது

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடை பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இக் கூட்டம் தொடர்பான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். கிருஸ்ணராஜா அறிவித்துள்ளார். (பர)

# போர்க் குற்ற விசாரணைக்கு உத்தரவிட்டால் இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்குமாம்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஒட்டாவாவில் தெரிவிப்பு

(ஒட்டாவா)

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் மனித உரிமை மீறல் இடம் பெற்றுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை உத்தர விடுமானால் இலங்கை அரசு அதற்கான கதவுகளைத் திறந்து விடத் தயாராகவே உள்ளது.

இவ்வாறு சிரேஷ்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஒட்டாவாவில் கனேடிய ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை அரசுக்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவு தேவைப்படுகிறது. இந்த நேரத்தில் கனடா எம்மைக் கைவிட்டுவிடக் கூடாது.

எமக்கு எல்லா நாடுகளினது ஆதரவும் தேவைப்படுகிறது. குறிப்பாக கனடாவின் உதவி அவசியமானது.

இலங்கையில் நடக்கும் பொதுநலவாய கூட்டத்தில் கனடாவின் பங்கு இல்லை யென்றால் மோசமாக இருக்கும்.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை பார பட்சமானது.ஒருபக்க சாட்சியங்களைக் கொண்டது.

அறிக்கையை இறுதி செய்வதற்கு முன்னர் நிபுணர் குழுவுக்கு முன்பாக எமது ஆலோசனைகளை கூறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உத்தரவிடுமானால், இலங்கை அரசாங்கம் அதற்கான கதவுகளைத் திறந்து விடத் தயாராகவே உள்ளது.



ஆனால் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்படுவது இலங்கையின் இறைமையை மீறுகின்ற செயலாகும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

சுதந்திரமான விசாரணை நடத்தக் கோரும், கனடாவில் வாழும் சுமார் 3 இலட்சம் பேரைக் கொண்ட தமிழ்ச் சமூகத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தே கனேடிய அரசாங்கமும் கனேடியப் பிரதமர் ஹார்பரும் அடிபணிந்து விட்டதாகவும் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார். (பர)

# மட்டக்களப்பு கடலில் மூழ்கி இரு மாணவர்கள் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர்,புன்னக்குடா கடலில் குளிக்க சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் மூழ்கி உயிரிழந்தனர்.

தளவாய் பிரதேசத்திலுள்ள பாடசாலை யொன்றில் தரம் 8இல் கல்வி கற்கும் ஏழு மாணவர்கள் மேலதிக வகுப்பு முடிந்த பின்னர் புன்னக்குடா கடலில் குளிக்க சென்றுள்ளனர்.

இவர்களில் ஐந்து மாணவர்கள் உயிர் தப்பியுள்ளனர். முதலில் குளிக்க சென்ற ஏழு மாணவர்களும் குளித்து கொண்டிருந்தபோது கடலில் மூழ்கியுள்ளனர்.

இதனையடுத்து பிரதேச மீனவர்கள் மற்றும் பொதுமக்களும் குறித்த மாணவர்களை மீட்க முயற்சித்துள்ளனர். இதன் போது ஐந்து மாணவர்கள் உயிருடன் மீட்கப்பட்டதுடன் இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த இரு மாணவர்களின் சடலங்கள் ஏறாவூர் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

உயிர் தப்பிய ஐந்து மாணவர்களும் மயக்க நிலையில் ஏறாவூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் நான்கு மாணவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (பா-9)

# இனப்படுகொலைக்கு எதிரான மாநாடு கோவையில் இன்று நடைபெறுகிறது

(கோவை)

இலங்கையில் தமிழர்களின் இனப்படு கொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கும் மன்னிப்பு வழங்கக் கோரியும் கோயம்புத்தூரில் மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இன்று மாலை 4 மணியளவில் கோவை வ.உ.சி. மைதானத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ம.தி.மு.க., பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள், பெரியார் திராவிடர் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, குடியியல் உரிமைகளுக்கான மக்கள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசியல்கட்சிகள், பொது அமைப்புகள் இம் மாநாட்டில் பங்கேற்க உள்ளன.

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா உள்ளிட்ட பலரும் இந்த மாநாட்டில் உரையாற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலைகள்,போர்க்குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று இந்த மாநாட்டில் வலியுறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உடனடி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு,தெற்காசியாவில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்களின் சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட விடங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக மாநாட்டை ஒழுங்கு செய்துள்ள இலங்கையின் இனப் படுகொலைகளுக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அமைப்பாளர் ஞான குறிஞ்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (பர)

# மட்டு, நீர்கொழும்பின் சில பகுதிகள் 2040ஆம் ஆண்டு நீரில் மூழ்கும்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு மாநகரங்களின் 15 தொடக்கம் 20 சத வீதமான பகுதி மக்கள், கடல்மட்ட உயர்வால் 2040 ஆம் ஆண்டில் பாதிப்பைச் சந்திப்பார்கள் என்று மொறட்டுவ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இலங்கை கரையோர பகுதிகளுக்கான காலநிலை முன்னெச்சரிக்கை செயற்பாட்டுத் திட்டம் என்ற மாதிரித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கட்டிட வடிவமைப்புப் பீடத்தின் பீடாதிபதியான பேராசிரியர் பீ.கே.எஸ்.மகாநாம, இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்புப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த சில பத்தாண்டுகளாக குறிப்பாக 2000 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களின் இயற்கை அழிவுகளால் பாதிப்படைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கானது அங்கு கடந்த 100 ஆண்டுகளில் இடம்பெற்ற மிகப் பெரிய வெள்ளப்பெருக்காக அமைந்துள்ளது.

2009 டிசம்பரில் இருந்து 2010 ஜனவரி வரை இங்கு பெறப்பட்ட மழை வீழ்ச்சியால் மக்களின் வாழ்வு மற்றும் சொத்துக்கள் என்பவற்றில் மிகப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கரை யோர சுற்றுலாத்துறைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்பு ஆகிய இரு பிரதேசங்களிலும் பெய்த புயலுடன் கூடிய மழையால் பல உயிர்ப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் பேராசிரியர் மகாநாம மேலும் குறிப்பிட்டார். (பர)

# வேலூர் சிறையில் நேற்று முருகன் -நளினி சந்திப்பு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முருகன் அவரது மனைவி நளினி இருவரும் வேலூர் சிறையில் நேற்று சந்தித்து பேசினர்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மூன்று பேரையும் தூக்கிலிடுவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.இந்நிலையில் அண்மையில் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்ட நளினி நேற்று காலை 7.30 மணிக்கு அவரது கீணவன் முருகனை சிறையில் சந்தித்து பேச சிறை அதிகாரிகள் அனுமதி வழங்கினர். (பா-9)

## வீரசிங்கம் மண்டபத்தில் இன்று கலை நிகழ்வு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் ஒரு மணி முதல் சிங்கப்பூர் நடிகர் புரவலரின் 'பிதாமகர் பீஷ்மர்' நாடகமும் தென்னிந்திய நடிகை காதல் மன்னன் புகழ் மானுவின் பரதநாட்டியமும் இடம்பெறும். மாணவர்களுக்கு 250 ரூபாயும் ஏனையோருக்கு 500 ரூபாய், 1000 ரூபாய் கட்டணமும் அறவிடப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ந)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி சார்ந்த விசேட கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ந)

**புனரமைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு**

தையிட்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கப் புனரமைப்புத் தொடர்பான கூட்டம் 7-ம் திகதி திங்கட்கிழமை அரச விடுமுறை காரணமாக நடைபெறமாட்டாது. 14.11.2011 திங்கட்கிழமை 10 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

J/247 தையிட்டி கிழக்கு கிராம சேவ[illegible] பிரிவுக்கு உ[illegible]ப்பட்டவர்கள் தவறாது சமுகம் த[illegible]ம்படி வேண்டப்படுகின்றீர்கள். (6732)

**வீடு விற்பனைக்கு**

அராலி வடக்கு, வட்டுக் கோட்டையில் 7 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0756768081, 0728562448

(சி-4914)

**SPECIAL CLASS**

க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர் தர மாணவர்களுக்கான கணக்கீடு, பொருளியல் பாடங்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். துரித மீட்டல் பயிற்சிகளும் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: 0784806778 (6741)

**அந்தண உதவிக்குரு தேவை**

மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்திற்கு அந்தண உதவிக்குரு தேவை. தங்குமிடவசதி வழங்கப்படும். (இளம் குடும்பத்திற்கு முன்னுரிமை)

பொருத்தமானவர்கள்:

விளம்பர இல. சி-4915
மே/பா வலம்புரி
இல.3, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு தங்கள் விபரங்களை அனுப்பி வைக்கவும். (இ)

# தமிழர்களை மட்டுமின்றி அனைவரையும்

# தற்போதைய அரசாங்கம் சூறையாடுகிறது

## அபிவிருத்தி என்கிற பேரில் மக்களை சீரழிக்கின்றனர் என்கிறார் தயாசிறி எம்.பி

(கொழும்பு)

**அரசாங்கம் தொடந்தும் ஐ.நா.வின் மனித உரிமைகள் தொடர்பான கொள்கைகளை மீறிச் செயற்படுகின்றது. அரசியல் பழிவாங்கல்கள் உட்பட இன்னோரன்ன காரணிகளை மையப்படுத்தி மூவின மக்களையும் அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கம் சீரழித்து வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

நாட்டின் மொத்தக் கடன் தொகை 12.4 வீதமாக அதிகரித்துள்ளது. பெற்றோலின் விலையை 12 ரூபாவால் அதிகரித்து விட்டு கொள்வனவில் தரகுப் பணம் பெறும் அரசை இலங்கையில் மட்டுமே பார்க்க முடியும். எதிர்வரும் நாட்களில் சீனிக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தயாசிறி ஜயசேகர எம்.பி.கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தமிழர்களை மாத்திரம் அல்ல சிங்கள மக்களையும் சேர்த்தே சீரழித்து வருகின்றது. சகல மக்களையும் சூறையாடி அடக்கியாண்டு வருகின்றது.

இதனால் தொடர்ந்து நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் தொடர்பான கொள்ளைகளும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

அரசாங்கம் இலாபம் ஈட்டிக் கொண்டு சுகபோகம் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அப்பாவி பொது மக்களை மிகவும் மோசமான முறையில் சூறையாடி வருகின்றது. யுத்தத்தின் பின்னர் நாடு அடைய வேண்டிய அபிவிருத்தி இலக்கை அடைய முடியாதளவிற்கு அரசின் மோசடிகள் மேலோங்கியுள்ளன.

புதிய சட்டமூலத்தை மிகவும் கபடத்தனமாக கொண்டு வந்து தனியாருக்கு சொந்தமான நிறுவனங்களையும் சுவீகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

20 ஏக்கர் காணிக்காக 36 தனியார் நிறுவனங்களை குறிவைத்து அரசு காய்நகர்த்தி வருகின்றது. கடந்தாண்டில் மாத்திரம் 106 அரச நிறுவனங்களால் 6ஆயிரத்து 193 கோடி ரூபா அரசிற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கடந்த ஒன்பது மாதத்திற்கு 519 மில்லியன் ரூபாவை சர்வதேசத்திடமிருந்து அரசாங்கம் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் மின் கட்டணங்கள் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்களும் உள்ளன. பங்குச் சந்தையில் உண்மைக்கு புறம்பான



தகவல்களைக் கூறி போலி அபிவிருத்தியையே அரசு வெளியுலகிற்கு காட்டுகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தினால் 13 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான துடுப்பாட்ட போட்டிகள் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறஉள்ளது.

எனவே அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் எஸ்.சிவசங்கர் அறிவித்துள்ளார். (அ-2)

✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

**ஞானம்** சஞ்சிகையின் ஆசிரியர் கலாநிதி தி.ஞானசேகரனுடனான இலக்கியக் கலந்துரையாடல் ஒன்று பருத்தித்துறை புலோலி வடக்கு புலோலியிலுள்ள இலக்கிய சோலை இ.த .குலசிங்கம் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறவுள்ளது. இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# திக்கம் இந்து மயானம் புனரமைப்பு

(கரவெட்டி)

திக்கம் இளைஞர் மத்திய சனசமூக நிலைய புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறுப்பினர்களின் நிதியுதவியுடனும் அப்பகுதி மக்களின் நிதியுதவியுடனும் 11இலட்சம் ரூபா செலவில் திக்கம் பொது இந்து மயானம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

திக்கம் பிரதேசத்தில் பல நூற்றாண்டுக்கு முன்னர் கடற்கரைப்பகுதியில் இவ் இந்து மயானம் உருவாக்கப்பட்டது.

அதன்பின் எதுவித புனரமைப்பு வேலைகளும் இன்றி இருந்ததுடன் இவ் இந்து மயானம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு தற்பொழுது இவ் இந்து மயானம் சுற்றுமதில் அமைக்கப்பட்டு நிலம் சமாந்தரமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் அப்பகுதி இளைஞர்களின் சேவைகள் பாராட்டுக்குரியது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (அ-3-24)

# ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக செயற்பட சிலர் முனைப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு

உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைக்கெதிராக தாக்குதல் நடத்துவதற்கு சில சக்திகள் முனைப்புக் காட்டி வருவதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அறிக்கை சமர்பிப்பதற்காக ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட காலக்கெடுவினை விடவும் நான்கு நாட்கள் பிந்தியே இந்த அறிக்கை வெளியிடப்படவுள்ளதாக பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போன்ற உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட தயாராகி வருவதாக சிரேஷ்ட அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் பாராளுமன்றில் சமர்ப்பித்த பின்னர் இவ்வாறன தாக்குதல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கை வெளியிடுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் இருந்தே சில சக்திகள் இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஊடகங்களின் கடுமையான விமர்சனங்களை வெளியிடத் தயராகி வருவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# மகனைக் கடத்தி 5 இலட்சம் ரூபா கேட்டு மிரட்டிய தந்தை கைது

(கொழும்பு)

கொஸ்வத்தை பிரதேசத்தில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் வளர்த்து வந்த 15 வயது சிறுவனை கடத்திச் சென்று மரண அச்சுறுத்தல் விடுத்து 5 இலட்சம் ரூபா கப்பம் கோரிய சிறுவனின் தந்தையை பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

கொஸ்வத்தை பிரதேசத்தில் சிறுவனை தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளான். பெற்றோரின் விருப்பத்திற்கு அமையவே கத்தோலிக்க மதகுரு குறித்த சிறுவனை வளர்த்து வந்துள்ளார். சிறுவனின் தந்தை ஓர் சாரதி ஆவார்.

குறித்த சிறுவன் அருகில் உள்ள கடையொன்றுக்கு சென்றபோது இனம்தெரியாதவர்கள் சிறுவனை கடத்திச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து தொலைபேசி அழைப்பை எடுத்த அந்த குழுவினர் சிறுவனை தாம் கடத்தியுள்ளதாகவும் அவனை விடுக்க 5 இலட்சம் ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் மிரட்டியுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தால் சிறுவனையும் மதகுருவையும் கொலை செய்ய போவதாகவும் அந்த குழுவினர் அச்சுறுத்தியுள்ளனர். இந்த நிலையில் இது குறித்து மதகுரு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சிறுவன் மீட்கப்பட்டதுடன் அவனை கடத்திய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு திருமதி பிரபாகரன்-கௌசல்யா தம்பதியினரின் செல்வப் புதல்வன்

## அனோஜன்



(யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்) அவர்கள் 2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மேலும் பல பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல வாழ்த்துவதுடன் கல்வியறிவூட்டிய ஆசான்கள், அதிபர், பெற்றோரையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா,
ஆசை அம்மப்பா, ஆசை அம்மம்மா,
மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார்,
சித்திமார், அன்ரா.

(சி-4911)




உலக சிறுவர், முதியோர் மாற்றாற்றல் வலுவுடையோர்தினம் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் துணைவேந்தர் சமூகவியல் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் முதியவர் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் நடைபவனி விழிப்புணர்வு நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

பெருகி வரும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய கிளினிக்குக்கு முன்பாக ஆரம்பிக்கும் நடைபவனி விழிப்புணர்வு நிகழ்வானது வைத்தியசாலையைச் சுற்றி வெளி வீதி வழியாக வலம் வந்து மீண்டும் தொடக்க இடத்தில் முடிபடையும்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், சமய, சமூக நிறுவனங்கள், அரச ஸ்தாபனங்கள், வங்கிகள், கல்வி நிறுவனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு யாழ் போதனா வைத்தியசாலையின் உடற்கூற்று வைத்திய கலாநிதி எஸ். சிவன்சுதன் கேட்டுள்ளார். (பா)

## கந்தபுராண படிப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் கந்தபுராணப் படிப்பு நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தை மாதம் வரை நடைபெறவுள்ளது.

இப்படிப்பு தொடர்ந்து தினசரி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆரம்ப தினத்தன்று திங்கட்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.30 மணிவரை அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

கந்தபுராண படிப்பின் பயனினை சைவ சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் ஆகியோர் ஆற்றவுள்ளார்கள். (4)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள்- துவிச்சக்கரவண்டி மோதிய விபத்தில் மூவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு அல்வாய் ஓடவைரவர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவது, அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி பகுதியில் இருந்து நெல்லியடி பகுதிக்கு துவிச்சக்கரவண்டியில் வந்த இருவரும் அல்வாய் ஓடவைரவர் பகுதியில் இருந்து அல்வாய்ப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவரும் மோதுண்டதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற அல்வாய் வடக்கு முத்துமாரியம்மன் பகுதியை சேர்ந்த கணேசலிங்கம் கமல்ராஜ் (வயது 28) என்ற குடும்பஸ்தரும் சிவராசா கமல்ராஜ் (வயது 21) என்ற இளைஞனும் மோட்டார் சைக்கிளில் பயணித்த அல்வாய் கிழக்கைச் சேர்ந்த பத்மநாதன் பிரசாந்தன் (வயது 30) என்ற குடும்பஸ்தரும் பலத்த காயங்களுடன் சிகிச்சைபெற்று வருகின்றனர். (அ-3-24-10)

# வடமராட்சி கிழக்கில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு கல்வி கோட்டத்தில் காணப்படும் பிரதான பாடங்களுக்கான ஆசியரின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வடமாகாண கல்வி அமைச்சினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கோட்டத்தில் ஆங்கிலம்,விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதுவரை 24 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 24 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

மேற்குறித்த வெற்றிடங்களுக்கு வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம் எனவும் வடமராட்சி கிழக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் பாரம்பரியகைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-3-10)

## அறிமுகநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீட 2010/2011 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களிற்கான அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு முன்னர் நாளை திங்கட்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டு பின்னர் திகதி மாற்றப்பட்டுள்ளது.

எனவே அறிமுக நிகழ்விற்கு அனைத்து புதுமுக மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## இராசி பலன்

06.11.2011
(ஐப்பசி 20, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
ஏகாதசி மாலை 6.32 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 10.11 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
உத்தான ஏகாதசி விரதம்,
ஹஜ்ஜுப் பெருநாள்

**மேடம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். மதிப்பும் மரியாதையும் உயரும். உறவினர் வருகையுண்டு.

**இடபம்** கண்ணன் வழிபாடு காரிய வெற்றியைத் தரும். அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள். மனையில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியம் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு. சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை அமையலாம்.

**கடகம்** எதிர்பாராத வகையில் சில மனத்தாபங்கள் ஏற்படலாம். பிரயாணத்தில் பொருட்களில் கவனம் தேவை. உடல் நலத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டிய நாள்.

**சிங்கம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும். குடும்பத்தினரிடையே கலகலப்பான சூழ்நிலை அமையலாம். தொலைபேசி வழித் தகவலால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள். ஆரோக்கியம் சீராகி உற்சாகம் அடைவீர்கள். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்

**துலாம்** வியாபார நன்மைக்காக பாடுபடுவீர்கள். கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள். பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு. உஷ்ண சம்பந்தமான ரோக நிலையுண்டு.

**விருச்சிகம்** சுப செலவுகள் அதிகரிக்கும். உறவினர் வருகையுண்டு. வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள். சந்தித்த நபர்களால் நல்ல தகவல் ஒன்று கிடைக்கலாம்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள். அயலவர்களுடன் நேசங்கள் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்ட முன் வருவர்.

**மகரம்** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம். இல்லத் தேவைகள் பூர்த்தியாகும். வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** மனக் குழப்பமான நாள். விரயங்கள் கூடும். நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிபுக்கு வரும். தொழில் நலன் கருதி புதியவர்களை இணைக்கும் எண்ணம் தோன்றும்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு உட்பட நேரிடலாம். பயணங்களால் சில அலைச்சல்கள் ஏற்படலாம். சயன சுகக் குறைவுண்டு.பிறருக்கு உதவி செய்யும் சூழ்நிலை அமையலாம்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### பல்லும் பாதுகாப்பும்!

"என்ன சேர் உங்களின் குழந்தையா இது?"

"ஹி...ஆமாம்!"

"எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?"

"பல் வைத்தியரைச் சந்தித்துவிட்டு வருகின்றேன்.!"

"எதற்காக?"

இந்தக் குழந்தைக்குப் பல்வரிசை சரியாக இல்லை...

அதைச் சற்று சீராக்க முடியுமா என்று ஆலோசனை கேட்பதற்காகச் சென்றேன்!

இது ஒரு பெரிய குறையா சேர்?

"ஆமாம்... அண்மையில் சிங்கப்பூரிலே ஒரு சோதனை நடத்தினார்கள்!" சீரான பற்கள் உள்ள குழந்தைகள் ஒரு பிரிவு! சீரற்ற பல்வரிசையுள்ள குழந்தைகள் ஒரு பிரிவு. இந்த இரண்டு பிரிவிற்கும் பொதுவாக ஒரு போட்டி வைத்தார்கள்... முதல் பிரிவுதான் வெற்றி பெற்றது.

"ஏன் அப்படி?"

அந்தக் குழந்தைகளுக்கு ஆக்கத்திறன் (Creative thinking) அதிகமாக இருக்கிறது... நல்லதோற்றம், மனத்தெம்பைக் கொடுகிறது.பற்களிலே குறைபாடு இருந்தால் முகத்தோற்றம் வித்தியாசப்படுவது வழமையாகும். அதனாலே அந்தக் குழந்தைகளுக்கு அவர்களையும் அறியாமல் ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை உண்டாகிறது! எதிலும் உற்சாகம் இல்லாமல் சோர்ந்து போய்விடுகிறார்கள்!

"அதனாலேதான் நீங்களும் உங்களின் குழந்தையினுடைய பல் அமைப்புச் சரியாக இருக்க வேண்டும் என்பதிலே இவ்வளவு அக்கறையாய் இருக்கின்றீர்களா?"

"ஆமாம்!" ஆனாலும் இது இப்போதே மிகவும் குறும்பு..! வைத்தியசாலையிலேயே இது வாயைத் திறந்ததும் அந்த வைத்தியர் மிகவும் சந்தோசப்பட்டார்!

"ஏன்?"

"அதற்குப் பின்தானே..." அவர் தன்னுடைய விரலையே என் குழந்தை வாயிலிருந்து வெளியே எடுக்க முடிந்தது.!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 130 |
| தக்காளி | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 25 |
| கோவா | 35 | 60 | 30 |
| கரட் | 65 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 85 | 60 | 80 |
| பாகற்காய் | - | 90 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக்கிழங்கு | 60 | 80 | - |
| பயற்றங்காய் | 90 | 120 | 130 |
| லீக்ஸ் | 25 | 40 | 30 |
| பீற்றூட் | 15 | 30 | 20 |
| கறிமிளகாய் | - | 90 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 50 |
| போஞ்சி | - | 140 | 90 |
| கத்தரி தம்புள்ள | 60 | 90 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 15 |
| தேசிக்காய் | 200 | 280 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 30 | 30 |

# டெங்குநோய் அபாயத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

## வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

பருவமழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்குநோய் பரவும் அபாயம் காணப்படுகிறது. இதனால் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து டெங்கை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உண்டு.

அத்துடன் சுகாதார சேவைகள் மட்டுமல்ல உள்ளூராட்சி திணைக்களத்தின் பங்களிப்பு மிக அவசியமானது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி.எஸ்.ரதனியூட் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் மாவட்ட செயலாளர் என்.வேதநாயகன் தலைமையில் டெங்குநோய் தடுப்பு சம்பந்தமாக டெங்கு நோய் தடுப்பு சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போது மன்னார் பகுதியில் மழை காலம் தொடங்கி விட்டது. இதனால் இப்பகுதியில் டெங்குபரவும் அபாயமும் தென்படுகின்றது.

இவ்டெங்கு ஒழிப்பை சுகாதார திணைக்களம் மட்டும் தனித்து நின்று கட்டுப்படுத்த முடியாது. அனைத்து தரப்பினரினதும் பங்களிப்பும் அதற்கு மிகவும் அவசியமானது.

குறிப்பாக உள்ளூராட்சி திணைக்களம் கூடிய பங்களிப்பை செலுத்த வேண்டிய அவசியம் உண்டு.

நாளாந்தம் குப்பைகூழங்களை அகற்றும் பணியை மேற்கொள்வதுடன் நகர், கிராம சுத்திகரிப்பையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசியம் இங்கு இருக்கின்றது.

அத்துடன் சுகாதார பகுதியினரும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை மேற்கொள்வதுடன் இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் பொலிஸ் குழுவுடன் இணைந்து ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றார். (அ-2)

## அடிக்கல்நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பஞ்சதல இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி 8.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

பக்தர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3-136)

# பொதுநலவாய மாநாட்டை கனடா பகிஷ்கரிக்காது–வாசுதேவ

(கொழும்பு)

இலங்கையில், அடுத்து நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை கனடா பகிஷ்கரிக்காது என தான் நம்புவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேபோல் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கனேடிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகளை நிறுத்தாது என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கனடாவின் ஒட்டாவா நகரில் உள்ள இலங்கை தூதரக அலுவலகத்தில் நடைபெற்ற நேர்காணல் ஒன்றின் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

கனடாவின் உதவி இல்லாமல் போவது இலங்கைக்கு பெரும் இழப்பு என்ற போதிலும் இதனை தாங்கிக் கொள்ள முடியும். சகல, சர்வதேச நாடுகளின் உதவிகளையும் இலங்கை எதிர்பார்த்துள்ளது. முக்கியமாக கனடாவின் உதவியை எதிர்பார்த்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவு இலங்கைக்கு தொடர்ந்தும் தேவைப்படுகின்றது. இம்முறை இலங்கையை நிராகரிக்க வேண்டாம் என கனடாவிடம் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார். (அ)






# இந்திய அரசு வீடுகளை அமைத்து கொடுப்பதற்கு பதிலாக நிதி உதவியை வழங்கும்- மத்திய அரசு

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு 50ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதாக இந்திய அரசு உறுதியளித்திருந்த நிலையில் இப்போது அத்திட்டத்திற்கு நேரடியாக நிதியுதவியை வழங்கவுள்ளதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

தமிழர் பகுதிகளான மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தில் வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் யாழ்ப்பாணப்பகுதியில் ஆயிரம் வீடுகள்ளக் கட்டிக்கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.ஆனால் ஓராண்டில் அங்கு 52 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத்திட்டத்தில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருவதால் பயனாளிகளுக்கு நேரடியாக பணத்தை வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி இலங்கை ரூபாய் மதிப்பில் ஒவ்வொருவருக்கும் தலா 5.5 இலட்சம் ரூபா (இந்திய ரூபா மதிப்பில் 2.45 இலட்சம்) வழங்கப்படும் என்று தெரிகிறது.

இந்தத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. அதன் ஒப்புதலுக்காக மட்டுமே காத்திருக்கின்றோம் என்று இந்திய வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். பணத்தை நேரடியாக வழங்குமாறு இந்திய அரசிடம் இலங்கை அரசு கேட்டுக் கொண்டதால் இத்திட்டத்தை செயற்படுத்த மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஒக்டோபரில் இலங்கை சென்ற இந்திய மத்திய வெளியுறவு செயலர் ரஞ்சன் மத்தாய் இந்திய அரசு சார்பில் தமிழர் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் வீடுகளை ஆய்வு செய்திருந்தார். (அ)


## மணமகன் தேவை


காரைநகர் இந்து 1980 ரோகிணி நட்சத்திரம் உயரம் 5' 3" லக்கினத்தில் கேது, 8 இல் செவ்வாய், சனி, பாவம் 68 A/L, Computer படித்த மணமகளுக்கு வெளிநாட்டு மணமகனைத் தேடுகின்றனர். அத்துடன் யாழிந்து வேளாள 1975 திருவாதிரை நட்சத்திரம் பாவம் 38 B.sc (Maths) படித்த மணமகளுக்கு பட்டதாரி மணமகனை உள்நாட்டில் மட்டும் தேடுகின்றனர்.

தொடர்பு:- சாயிநாதன் திருமண சேவை. இல.27 பெர்னாண்டோ வீதி, வெள்ளவத்தை, கொழும்பு- 06 தொலைபேசி:- 011-2364146, Fax- 011 2363436, E-Mail:- nathan-met@hotmail.com

(சி/4887)




*நொக்கியா ஸ்டோர்ஸ் 230/1 காலி வீதி, கொழும்பு 4. 0777866820 *நொக்கியா புரபசனல் சென்டர் - இல. 14, டி பொன்சேகா பிளேஸ், கொழும்பு 5. தொலைபேசி 0773 099038, 011 5575000, நீடிப்பு 5050 *நொக்கியா பொயின்ட்: கிரஸ்கற் 011 5555278, உலக வர்த்தக நிலையம் 011 5748597, மெஜஸ்டிக் சிற்றி 011 5738890, லிபர்ட்டி பிளாஸா 011 2577959, கண்டி சிற்றி சென்றர் 081 2205836 *நொக்கிய கெயர் சென்றர் : கொழும்பு 011 5344237, கண்டி 081 5628054, காலி 091 5629881-4, குருநாகல் 037 5624141, இரத்தினபுரி 045 5447003, அனுராதபுரம் 077 7320945 *பிரதான முகவர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம் : ஷெல்டன் எண்டர்பிரைஸ் (கிழக்கு) 065 2227071, ஹேமந்த எண்டர்பிரைஸ் (சப்ரகமுவ) 077 7671931, ஹேவகே டிஸ்ரிபியூட்டர்ஸ் (பிரைவெற்) லிமிடட் (வடமேல்) 071 8682845, ஹேவகே ஹோல்டிங்ஸ் (பிரைவெற்) (மத்திய மற்றும் ஊவா) 081 5620077, சொப்ட்லொஜிக் இன்டர்நஷனல் (மேற்கு மற்றும் தெற்கு) 077 7580580, எஸ்.வீ.எம்.டெக்னோலஜீஸ் (பிரைவெற்) லிமிடெட் (வடக்கு) 021 4925828 மற்றும் த மொபைல் லிங்க் (வட மத்திய) 077 3875874.







விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்திரனராக கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி சாந்தி சச்சிதானந்தம் வழங்குவதையும் விழுது பயிலுநர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய நூலின் முதற்பிரதியை அரச அதிபர் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# யாழ்.மருத்துவ சங்கத்தின் விஞ்ஞான மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் விஞ்ஞான மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் இடம் பெற்று வருகின்றது.

இம்மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக இலங்கையின் புகழ் பூத்த மருத்துவரும் மருத்துவ பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளருமான தேசமான்ய பேராசிரியர் றிஸ்வி ஷெஃப், கௌரவ விருந்தினராக என்பு முறீவு சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஏ.பான்கல ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

அத்தோடு இந்த மாநாட்டு அமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இரண்டு அமர்வுகளாக யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வுகளில் பல ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றதோடு மேலதிகமாக ஏழு வளவாளர்களின் விரிவுரைகளும் இடம்பெறும்.

அத்துடன் சுகாதார மேம்பாடு, பாலியல் ஆரோக்கியம், போதைப்பொருள் பாவனை மற்றும் வாய்சசுகாதாரம் தொடர்பான நான்கு குழுநிலை அளிக்கைகளும் நடைபெற விருக்கின்றன.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவென வைத்திய நிபுணர்கள் பலர் நாட்டின் ஏனைய இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கின்றார்கள்.

அத்தோடு இன்று காலை நடைபெறும் இம்மாநாட்டில் மூன்றாவது அமர்வில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் நினைவுப் பேருரையை ஒரு காத்திரமான பராமரிப்பை நோக்கி; ஒரு மனிதன் என்ற வகையில் நோயாளி எனும் தலைப்பில் உளநல மன நோயியல் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சி.சிவயோகன் நிகழ்த்தவுள்ளார் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ வைத்தியர் வைத்தியகலாநிதி எஸ்.கே.அருள் மொழி தெரிவித்துள்ளார். (4-2)

# வாக்காளர்களாக பதிவு செய்வதற்கான கால எல்லை நவம்பர் 30 வரை நீடிப்பு

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளாதவர்கள் அப்பெயர்களை பதிவு செய்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

பெயர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கால எல்லை கடந்த 2ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. இக்கால அவகாசம் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டதன்படி யாழ்.மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் 41 ஆயிரத்து 715 வாக்காளர்களை நீக்குவதற்கும் 16 ஆயிரத்து 999 வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய படிவங்கள், புத்தகங்கள் காட்சிப்படுத்துவதற்காக அந்தப் பிரதேச செயலர்களுக்கும் கிராம அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத் தவறியவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாகக் குறித்த காலப்பகுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்எனவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தேசிய மயப்படுத்தும் திட்டத்தின் பின்னணியில் அரசியல் பழிவாங்கல்

## தயாசிறி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிறுவனங்களை தேசிய மயப்படுத்தும் திட்டத்தின் பின்னணியில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பிணர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலாபமீட்டாத நிறுவனங்கைள சுவீகரித்து அவற்றை தேசிய மயப்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் குறித்து எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.இந்தச் சட்டத்தின் கீழ் கொழும்பின் 20 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நட்டமடைந்த நிறுவனங்களாக அரசாங்கத்தினால் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் சில இலாபமீட்டி வருகின்றன.

இலாபமீட்டி வரும் செவனகல மற்றும் பெலவத்த சீனி உற்பத்தி நிறுவனங்கள் சுவீகரிக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

குறித்த நிறுவனங்களின் சீனி உற்பத்திகளை சந்தைக்கு வெளியிடுவதனை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.


இதன் மூலம் நாட்டில் சீனிக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வெளிநாடுகளிலிருந்து சீனியை இறக்குமதி செய்ய முயற்சிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# பொதுக்கூட்டம்

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதனை பழைய மாணவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளித்து கல்லூரி வளர்ச்சியில் பங்களிப்பு செய்யுமாறு பழைய மாணவர் சங்க செயலாளர் சோ. விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார். (2)

# தொடர்ந்து பெய்த கனமழையால் குடியிருப்புக்கள் வெள்ளத்தில்



(கரவெட்டி)

நேற்று முன்தினம் பெய்த கனமழையால் வடமராட்சியில் பல நூற்றுக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பொது மண்டபங்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வடமராட்சியின் தாழ்வுப் பிரதேசங்களை பொலிகண்டி, சக்கோட்டை, இன்பசிட்டி, திக்கம் வல்வெட்டித்துறை மற்றும் கரவெட்டி இராஜகிராமம் பகுதிகளில் உள்ள மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர்.

பருவகாலங்களில் பெய்யும் மழை வெள்ளத்தினால் இவ்வாறான இடம் பெயர்வுகள் கடந்த காலங்களில் இடம் பெறுவதாகவும் எதிர்வரும் பருவகால மழையினால் அம்மக்கள் மேலும் பல இடம் பெயர்வுகளையும் அசௌகரி[illegible]ளையும் அன்றாட வாழ்க்கை செலவு பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பின[illegible] அம்மக்களின் சிரமங்களை ஓரளவேனு[illegible] தறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்[illegible]ள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-24)


# மரண அறிவித்தல்

## நன்னித்தம்பி அரசரத்தினம்

(நாகம்ஸ் உரிமையாளர் )



நன்னித்தம்பி அரசரத்தினம் (நாகம்ஸ் உரிமையாளர்) கடந்த 03.11.2011 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.11.2011 இன்று (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மதியம் ஒரு மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.ராஜ்குமார் (பெறா மகன்)
நாகம்ஸ் சக நிறுவனம்,
சுன்னாகம்.

(6743)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### மனிதப் பிரசவம்

பட்டினிச் சாவில்
பிரபஞ்சம் அழுது
புலம்புகிறது
கைகோர்த்துச் சிரித்து
மகிழ்கிறது
அழிவைச் சுரந்து கொண்டிருக்கும்
ஆயுததரகர்கள்!
சுதந்திரமும்
சுற்றிவளைப்பில் பிடிபட்டதாய்
ஊமையானது
இங்கு விமர்சனமும்
விடியழிழந்துபோனது!
உரிமைகள் உருக்குலைந்து
அதிகாரத்துக்கு மண்டியிடுகிறது
ஜனநாயகம் முடமாகி
வரவேற்பு செய்கிறது!
வர்க்கம்
முதலாளித்துவத்துடன்
விபச்சாரம் புரிந்து
வறுமையைப் பிரபஞ்சத்தில்
பிரசவிக்கின்றது...!
எப்படியாகினும்
மனிதம்
மரணத்தை நோக்கியே
பயணமாகிக் கொண்டிருக்கிறது

ஜே.எஸ்.ராஜ்
யாழ்.பல்கலைக்கழகம்

### மன்னித்துவிடு

இந்த வானம்
விரிந்திராமல் இருந்தால்
நான்
உன்னை மட்டும்
சந்தித்திருப்பேன்
இந்தப் பூமி
சுற்றாதிருந்தால் நான்
உன்னைவிட்டுச்
சென்றிருக்கவேமாட்டேன்
என்னை மன்னித்துவிடு
மங்கையே
இது என் தவறல்ல
இயற்கையின் தவறே

கதிர், நெடுந்தீவு.

### ஆண்டவனை வேண்டுகின்றோம்

மருட்டி வருத்திய
மடக்குவாதம் மருந்தாலும்
விருந்தாலும் மறைந்து போக
அடுத்துவந்த மூடக்குவாதம்
அடக்கமட தூடிக்க வைத்து
நடுக்கத்தைக் கொடுத்து
நாள்தோறும் வாட்டிவிலே
நித்திரையைக் குழப்பி
நிம்மதியைக் கெடுத்தது
ஆண்டாண்டாய் நோயுற்று
இன்னலுடன் வாழ்கின்ற
அவல நிலையகல
ஆவலுடன் வேண்டுகின்றோம்
ஆண்டவனே இரங்கிடுவாய்
நோய் நீங்க வரமருளி
நிம்மதியை நிறையவைப்பாய்
ஆறுதலை எமக்களித்து
ஆனந்த வாழ்வளிப்பாய்

குளப்பிட்டி க. அருமைநாயகம்

### அவரவர் பார்வையில்

**ஏமாற்றம்**
ஒரு காலை இழந்தேன்
பொய்க்கால் கிடைத்தது
காதலியை இழந்தேன்
உண்மைக்காதல் புரிந்தது

**பசி**
ஒருவேளை சோற்றுக்காக
தெருத்தெருவாக அலைந்தேன்
பதில் கிடைத்தது
மனிதநேயம் அழிந்தது என்று

**முதுமை**
ஊர் இழந்து
உறவு இழந்து நிற்கும்
என் இருப்பிடம்
முதியோர் இல்லம்

**முகம்**
இதயத்தைக் காட்டும் கண்ணாடி
உணர்ச்சிகளை மறைக்கும்
மாயக்கண்ணாடி

**சீர்கேடு**
நவீன யுகத்தில்
குப்பைத் தொட்டியும்
பிள்ளைத் தொட்டிலாகிவிட்டது

க.செல்வமலர்
சிறுவர் இல்லம்
திருநெல்வேலி

### அன்னை

அன்பில் முதன்மை
அரவணைப்பில் முதன்மை
அமுதூட்டலில் முதன்மை
ஆதரவில் முதன்மை
பாசத்தில் முதன்மை
நேசத்தில் முதன்மை
கெஞ்சலில் முதன்மை
கொஞ்சலில் முதன்மை
முதன்மை இடத்தில்
கருணை வடிவாய்
பணிபுரிபவள் கண்கண்ட
தெய்வமாகிய தாயை
அன்னையர் தினத்தில் வாழ்த்தி
பெருமையுடன் போற்றிடுவோம்

கங்கா.பா
வண்ணார்பண்ணை

### என் உயிர்த் தோழா

இன்றுவரை புரியவில்லை
எப்படி நாம் இணைந்தோமென
விதி எனும் விளையாட்டை
நம்புகின்றேன் உன் வரவால்
தோளோடு தோள் சாய்ந்து
பல கதைகள் பேசினோம்
நட்பு எனும் அமிர்தத்தை
உன்னதமாய் உணர்ந்திருந்தோம்
பிரிவு எனும் வலி கண்டும்
நினைவுகளைச் சுமக்கின்றோம்
உறவுகள் புடை சூழ்ந்தும்
அநாதைகளாய் வாழ்கின்றோம்
என்ன தவம் செய்தேனோ
உன் நட்பைப் பெறுவதற்கு
தவங்கிடந்து காத்திருக்கின்றேன்
உன் முகத்தைக் காண்பதற்கு...

பருத்தியூர்
ஆர்.ராஜ்

### இமயம் தொட...

நீ கருவில் உருவாகும் போதே
உனக்கான உலகம்
படைக்கப்படுகின்றது
கருவில் சுமக்கும் அன்னையிடம்
உன்னைப் பற்றிய கனவுகள்
ஏராளம் ஏராளம் கொட்டிக் கிடக்கும்
உணர்ந்து கொள்
அவர் உணர்வுகளுடன்
இணைந்து கொள்

மாவைநா.கஜேந்திரன்

### மண் வாழ்வு

அதைச்சாட்டி இதைச்சாட்டி
எதைச்சாட்டி எல்லாமோ
பிடுங்கப்படுகிறது வாழ்வு
உறிஞ்சப்படுகிறது தேட்டம்

அப்பவோ இப்பவோ
எப்பவும் உருகுவது
நாதியற்ற தமிழரின்
பாதி வெந்த உடலுயிர்

துடுக்காய் மிடுக்காய்
எடுப்பாய் நிலையொன்று
மண்ணறிந்து பயிரிடு நீ
மகிழ்வுடன் உன் வாழ்விருக்கும்
உழுதுண்ணும் வாழ்வுதான்
பழுதின்றி எமைக்காக்கும்

அ.பூவானந்தன்
வயாவிளான்

## மௌனத்தின் தேடல் – 95



### ஏன் வாழ முடியாது

பகை உணர்வு கொண்ட
நாயுங்குரங்கும் நட்போடு
பழக முடியுமென்றால்
பகுத்தறிவு கொண்ட நம்மால்
சாதி, மத, இன, மொழி பேதமின்றி
சமத்துவமாக ஏன் வாழ முடியாது?

துரை,
தென்மட்டுவில்

### உணர்வாயா?

மன்றங்கள் கூடி
மாநாடு வேண்டாம்
மந்தியினம் உணர்ந்ததை
மனிதா நீ உணர்வாயா?

க.கஜனிகா,
அரியாலை.

### ஒற்றுமை

வேற்றுமையில் ஒற்றுமையாக
இருக்கும் உங்கள் குணம்
எமக்கும் இருந்திருந்தால்
இன்று அபிவிருத்தியில்
அமெரிக்காவையும்
வென்றிருப்போம்

நெய்தல்,
தேன்மொழி

### எதிர்காலம்

இவ் அன்பு நம்மிடையே
இருக்குமானால்
எதிர்காலத்தில் மரண
ஓலங்கள் நம்
காதுகளுக்கு கேட்காது

சு.சுதாகினி,
குருநகர்.

### ஒற்றுமை

ஐந்து அறிவுள்ள ஜீவன்களே
உங்கள் ஒற்றுமையை பார்த்து
மனிதர் நாம் வெட்கிப்போனோம்
உங்கள் ஒற்றுமை எமக்கிருந்திருந்தால்
மனிதர்களான எமது உயிர்கள்
இன்று கல்லறையில் உறங்காது

அ.அன்ரன்,
யாழ்ப்பாணம்.

### அபேதம்

பிரிவினைவாதமென்ற
மானிட வேதத்தை—இந்த
ஐந்தறிவு ஜீவன்கள்
வென்றுவிட்டதடா

வி.கே.அமுதஸ்ரீ
இமையாணன்

### உதயம்

மந்தியிலிருந்து
மருவிய மனிதனிடத்து
இல்லா அன்பு
மந்தியிடத்திலே
மலர்கின்றது இன்று

ஜே.கீர்த்தனன்,
பருத்தித்துறை

### உயர்ந்தவாழ்வு

பகையினை மறந்து
இனவேற்றுமையின்றி
இணைந்து வாழும்
உங்கள் வாழ்வே உயர்ந்தது.

மா.செழியன் வேலணை-03

### கற்றுக்கொள்

ஐந்தறிவு படைப்புக்களாயினும்
எமக்குள் இல்லையடா-பேதமை
எம்மை நோக்கு, கற்றுக்கொள்
ஆறறிவு உனக்கேன்?

ஐ.யோகா,
கரணவாய் மேற்கு

### உருப்படும்

உம்மைப்போல்
மதங்கள் இணைந்தால்
உலகமே உருப்படும்
உம்மைப்போல்
இனங்கள் இணைந்தால்
ஒற்றுமை மேலொங்கும்

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

### வியக்கிறேன்!

மானிடமே
புரியாத முரண்படும்போது
விலங்கினமே!
உம் நிலை
விளக்க வைக்கிறது

திவியா மோகன்,
பிளவத்தை

### நட்பு

ஆறறிவுத் தலைமுறை
தன்னினத்தைத் தேடித்தேடி
அழித்துக் கொண்டிருப்பதால்
நன்றியுள்ள ஐந்தறிவே
அடுத்த தலைமுறையை
மோப்பம் பிடித்துவிட்டாய்

யூ.உ.ஜெனஸ்ரினி
தோமஸ் பெண்கள் பாடசாலை,
பருத்தித்துறை

### பலம்

உன்னை நாயாய்ப்படுத்தியது
மனித இனம்
என்னை வைத்து குரங்கு வித்தை
காட்டியது ஆனால்... அதை
இன்று தங்களுக்குள் தாங்களே
செய்து கொள்கிறது
வா! நண்பனே ஒற்றுமையாய்
நாமிருப்போம்!

இ.தனஞ்சயன்,
கொக்குவில்.

### உங்கள் ஒற்றுமை

ஒற்றுமையில்லா மனிதர் வாழ்வில்
ஒழிந்து போனதோ மனித மாண்பு
எங்கு பார்த்தாலும் வெட்டும் கொத்தும்
சீறிப்பாய்வதோ சிவப்பு இரத்தம்
பகுத்தறிவு இல்லாத வெவ்வேறு ஜீவன்களே
உங்கள் ஒற்றுமையை மனிதர் பார்ப்பாரா?

அ.மேரி அல்போன்சா, யாழ்ப்பாணம்.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 96

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 11.11.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பரீட்சையின் பின்னரான அறிவை விட தனித்திறமை பெண்களுக்கு வேண்டும்



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பரீட்சையில் தோற்றிய பின்னர் பெறும் அறிவையும் விஞ்சும் வகையிலான சிரேஷ்ட தனித்திறமை பெண்களுக்கு இருக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவ்வாறான தனித்திறமைகளை கட்டியெழுப்புவதற்குரிய சமூக, கலாசார வரலாற்று அடித்தளம் இன்னமும் நாட்டில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு விஷாகா வித்தியாலயத்தில் 2010 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்தார்.

நாட்டில் உள்ள கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளைப் போன்று சர்வதேச ரீதியாகவுள்ள அறிஞர்கள் தெரிவித்துள்ள விடயங்களை பெண்கள் கடைப்பிடிக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சஞ்சிகையான டைம்ஸ் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு குறித்தும் ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார். (4-2)

### தொம்பே பொலிஸ் நிலையத்தில்

# உயிரிழந்த சந்தேகநபரின் மனைவி 50 இலட்சம் கோரி மனு தாக்கல்

(கொழும்பு)

தொம்பே பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்த சந்தேக நபரின் மனைவி 50 இலட்ச ரூபா நட்டஈடு கோரி மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தொம்பே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் சந்தேக நபரான கயான் பிரசங்க என்பவர் உயிரிழந்தார்.

தொம்பே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி சிவில் உடையணிந்த பொலிஸார் தமது கணவரை கைது செய்து அழைத்துச் சென்றதாகவும் பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு சென்று பார்த்த போது கணவர் அங்கு இருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மறுநாட்காலை கணவர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக தொலைபேசி மூலம் அறிவிக்கபட்டது.

கணவரின் படுகொலையின் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் இதனால் 50 இலட்ச ரூபா நட்ட ஈடு வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை உயிரிழந்த நபருடன் கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேகநபரும் பத்து இலட்ச ரூபா நட்டஈடு வழங்குமாறு கோரி மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்ததனைத் தொடர்ந்து பிரதேசத்தில் பெரும் சர்ச்சை நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தொம்பே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சகல உத்தியோகத்தர்களும் இடமாற்றம் செய்யப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

(மல்லாவி)

பெரதேனியா பல்கலைக்கழக மாணவர்களால் வன்னியில் மீள்குடியேற்றத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் ஒலுமடு தமிழ் வித்தியாலயம், திருமுறிகண்டி, இந்து வித்தியாலயம், வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பாடசாலை, மு/பெரியபுளியங்குளம் அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்களில் செயல்முறையுடன் சேர்ந்த வினாக்களின் மீட்டலும் நடைபெறவுள்ளது.

வன்னியில் மீள்குடியேற்றத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இந்நிலைமையை கருத்திற்கொண்டு மேற்படி செயலமர்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதால் மேற்படி பாடசாலை மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயனடையுமாறு பெரதேனியா பல்கலைக்கழகத்தின் இச் செயலமர்வு இணைப்பாளர் எஸ்.அன்ரன் தெரிவித்துள்ளார். (4-3-15)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் **வாழ்வால் உதாரணமாகி** எனும் கிறிஸ்தவ ஆய்வரங்கு அண்மையில் நடைபெற்றது. இவ்வாய்வரங்கில் யாழ்.ஆயர் அதி வணபிதா தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பீடாதிபதி எஸ்.கே. யோகநாதனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# புகலிட கோரிக்கையாளர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு

## அவுஸ்திரேலியா அறிவிப்பு

(கொழும்பு)

படகு மூலம் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய 40 இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவு குற்றம் சுமத்தியுள்ளது.

படகில் பயணம் செய்த 44 பேரில் 41 தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த புகலிடக் கோரிக்கையாளர்களினால் அவுஸ்திரேலியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த 44 படகுப் பயணிகளும் மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் அவர்களை நாடு கடத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வெளிநாட்டுப் பிரஜைகளினால் அவுஸ்திரேலியா பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடும் என அடையாளப்படுத்தப்பட்ட நபர்களுக்கு அவுஸ்திரேலியா விசா வழங்காது என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட நாடு என்ற ரீதியில் அவுஸ்திரேலியா புகலிடக் கோரிக்கையாளர்களை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்க முடியாது.

எனவே இவ்வாறு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடுமென சந்தேகிக்கப்படும் நபர்கள் காலவரையறையின்றி தடுப்பு முகாம்களில் தங்கியிருக்க நேரிடும்.

இதேவேளை 40 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக அவுஸ்திரேலியாவின் ஆசியோ பாதுகாப்பு பிரிவு அடையாளப்படுத்திய போதிலும் உரிய காரணங்களை சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரசின் புகலிடக் கோரிக்கையாளர்கள் விவகார தேசிய இணைப்பாளர் பாலா விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த நபர்களில் ஒருவர் மட்டுமே புலிகளின் மருத்துவ பிரிவில் கடமையாற்றியுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த நபரும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களுக்கும் சிகிச்சை அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-4)

# கால்வாய்களை வெட்டுவதைவிட அரிசியை இறக்குமதி செய்யலாம்

## அமைச்சர் ரோஹித தெரிவிப்பு

(கொழும்பு)



நெற்செய்கைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பணத்தை செலவிடுவதை விடவும் அதில் மக்களுக்கு அரிசியை பெற்றுக் கொடுப்பது சிறந்தது என துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன குறிப்பிடுகின்றார்.

களுத்துறை பிரதேச அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கைவிடப்பட்ட வயல்கள் எனத் தெரிவித்து கால்வாய்களை வெட்டுவதற்கு பல மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் அந்த பணத்தில் அரிசியை வாங்கிக் கொடுத்தல் இலாபகரமாக அடையும் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

ஐந்து இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவை செலவிட்டு வெட்டபபட்ட வாய்க்காலால் எவ்வித பலனும் கிடையாதெனவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு அரிசியை வாங்கிக் கொடுத்திருந்தால் அதனை விட சிறப்பாக அமைந்திருக்கும் எனவும் ஹோகித அபேகுணவர்த்தன மேலும் கூறனார். (4-2)

# அரசு சமர்ப்பித்த சட்டமூலத்தை ஆட்சேபித்து மனுத்தாக்கல்

(கொழும்பு)

எதிர்பார்க்கபட்ட பெறுபேறுகளை அடையத் தவறும் நிறுவனங்கள் மற்றும் உரிய முறையில் பயன்படுத்தப்படாத சொத்துக்களை கைப்பற்றுவது தொடர்பாக அரசாங்கம் அண்மையில் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த சட்ட மூலத்தை ஆட்சேபித்து நேற்று முன்தினம் அடிப்படை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகேகொட நாலந்தாராமய விஹாரையின் விஹாராதிபதி தீனியாவல பாலித தேரர் இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.நிதி அமைச்சரின் செயலாளர் மற்றும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவசர தேசிய நடவடிக்கை என தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் குறித்த சட்ட மூலங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்படவில்லை எனவும் அதனை தனியார் சட்ட நிறுவனம் ஒன்றே தயாரித்துள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இதுவரை நடைமுறையில் இருந்த முறைமைக்கு முற்றிலும் மாறாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

முன் அறிவித்தல் இன்றி குறித்த சட்ட மூலம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாக .தெரிவித்துள்ளார்.

அவர் அது குறித்து நாட்டின் பிரஜைகளுக்கு விடயங்களை அறிவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

இதன் மூலம் மக்களின் இறைமையும் சட்டத்தின் உன்னத தத்துவம் போன்ற மக்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு மனுவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (4-2)

# குருவின் பார்வையில்


## விஞ்ஞான வளர்ச்சி

ஆன்மீகம் 25



தற்போது இருக்கும் 700 கோடி மக்கள் தொகையை 50-100 வருடத்திற்குள்ளாக 300கோடி மக்களாக்கினால் உலகில் கிடைக்கும் எல்லாவளங்களையும் கொண்ட அந்த 300 கோடி மக்கள் மிக நல்ல வாழ்க்கையை வாழமுடியும். அதற்காக மக்களைக் கொல்லத் தேவையில்லை. பிறப்பு எண்ணிக்கையை சற்றுக் குறைத்துக் கொண்டால், இந்த பூமியில் ஒவ்வொரு மனிதனும் நன்றாக வாழ முடியும். ஏற்கனவே இயற்கைச் சூழலில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றை மீட்டெடுத்து மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர இயலுமா? தற்போது நீங்கள் வசிக்கும் இடத்தைவிட்டு 25 வருடங்கள் வேறெங்கேனும் சென்று விட்டால், இந்த உலகில் 25 வருடங்கள் மனிதனே இல்லாது போய்விட்டால் எல்லா இடங்களிலும் மரங்கள் வளர்ந்து விடும். உங்கள் வீட்டினுள்ளும் மரங்கள் வளர்ந்து விடும், இயற்கை அப்படிப்பட்டது. நீங்கள் பூமியை விட்டுப் போகத்தேவையில்லை. ஆனால், மனிதனின் செயல் எல்லையை குறைக்க மக்கள் தொகையைக் குறைக்க வேண்டியுள்ளது. ஏனென்றால் விஞ்ஞானத்தின் உதவியால், மனிதனின் செயல் எல்லை மிகவும் விரிவடைந்திருக்கிறது. எனவே, மக்கள் தொகையைக் குறைத்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அதே நேரத்தில் விஞ்ஞானத்தையும் ஒரு பொறுப்பான நிலையிலிருந்து கையாள வேண்டும்.

விஞ்ஞானம் என்ற கருவியின் மூலம் நன்மையையும் நிகழ்த்த முடியும், தீமையையும் நிகழ்த்த முடியும். நன்மை நிகழ வேண்டுமானால், முதலில் அமைதியான, ஆனந்தமான மனிதனை உருவாக்கத் தேவையுள்ளது. இல்லாவிட்டால், அவனது கையில் எத்தகைய சக்தியைக் கொடுத்தாலும், அவன் தீமையையே உருவாக்குவான். உதாரணமாக நீங்கள் மகிழ்ச்



சியாக இருக்கும்போது மற்றவர்களுக்கு மிகநல்ல மனிதர்களாகவும், மகிழ்ச்சியில்லாத நேரங்களில் மிகத் தீமையான மனிதராகவும் தெரிகிறீர்கள். எனவே, விஞ்ஞானத்தின் மூலமாக மனிதனின் திறமை எல்லை மீறிப் போகும்போது அவனது உள்நிலையை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் மிக முக்கியமானது.

ஒரு முறை விஞ்ஞானிகளின் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள், ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். என்னவென்றால், விஞ்ஞானத்தில் நாம் மிகவும் முன்னேறி விட்டோம். எனவே கடவுளின் வேலை இனிமேல் தேவையில்லை. அவரை ஓய்வு பெறச் செய்துவிடலாம் என்பதே அந்தத் தீர்மானம். எனவே அவர்கள் அனைவரும் தேவலோகம் சென்றார்கள். அங்கே சென்று கடவுளிடம், "கடவுளே நீங்கள் உங்களுக்குத் தெரிந்ததைச் செய்தீர்கள் அவற்றை நாங்கள் இன்னும் முன்னேற்றப்பாதையில் எடுத்துச் சென்றிருக்கிறோம். எல்லாமே மிகநன்றாக நடந்திருக்கிறது. எதை வேண்டு மானாலும் எங்களால் உருவாக்க முடியும். உயிரை வேண்டுமானாலும் எங்களால் உருவாக்க முடியும் விஞ்ஞானம் அந்த அளவு வளர்ந்து விட்டது. எனவே எங்களுக்கு இனிமேல் நீங்கள் தேவையில்லை. உங்கள் வேலையை விட்டுவிட்டு ஓய்வு பெறுங்கள்" என்றனர். அதற்குக் கடவுள் "அப்படியா! உங்களால் என்னென்ன உருவாக்க முடியும்?" என்று கேட்டார். விஞ்ஞானிகள் உயிரை வேண்டுமானாலும் உருவாக்க முடியும் என்றனர். கடவுள் "சரி, ஒரு மனிதனை உருவாக்கிக் காட்டுங்கள்" என்று சொன்னார். உடனே விஞ்ஞானிகள் அங்கேயிருந்த மண்ணை எடுத்து விஞ்ஞானத்தை உபயோகப் படுத்தி, ஒருகுழந்தையை உருவாக் கிக் கடவுளிடம் கொடுத்தனர். கடவுள் "ஓ! விஞ்ஞான்த்தில் உண்மையிலேயே வளர்ந்திருக்கிறீர்கள் ஆனால், முதலில் இந்த மண்ணை உருவாக்குங்கள். நான் உருவாக்கிய மண்ணை எதற்காக உபயோகப் படுத்துகிறீர்கள்" என்றார். எனவே விஞ்ஞானத்தில் எவ்வளவுதான் நாம் வளர்ந்திருந்தாலும், இங்கிருக்கும் இயற்கை வளங்களை உபயோகப் படுத்தியே எல்லா விஞ்ஞானங்களையும் உருவாக்கியிருக்கிறோம். எனவே, இயற்கையைப் பாதுகாப்பதற்கான விஞ்ஞானத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் தற்போதுதான் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நோக்கம் இன்னும் அழமாக வேண்டும். இதற்கு அடிப்படை மக்கள் தொகைதான். மனிதகுல மேன்மைக்காக விஞ்ஞானத்தை எந்த அளவிற்கு உபயோகிக்க வேண்டும் என்பதை நிர்ணயித்து வாழ்ந்தால், அது தீமையை ஏற்படுத்தாமல் நன்மை வழங்குவதாகவே இருக்கும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

05

நவீன காலத்தில் பிரசித்தி பெற்றுள்ள இராகங்கள் தேவார இசையில் இல்லை.. மேலும் இராகப் பதத்தின் தந்தையான மதங்க முனிவர் கூறியுள்ள சுத்தசாயாலக சங்கீரண என்னும் இராக வகுப்பிற்கு தேவாரப் பண்களே சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன எனலாம். நுட்ப சுருதிகளையும் நுட்ப கமகங்களையும் வியாழக்குறிஞ்சி, பஞ்சமம் போன்ற பண்களில் நாம் காணலாம். ஆகவே தற்காலத்தில் ஆய்வுக் கெட்டிய வகையில் பண் சுமந்த தேவாரப்பாடல்களே நமக்குக் கிடைத்துள்ள ஆதி உருப்படிகள் எனலாம்.

இசை உலக வரலாற்றில் இசைப் பாடல்களை இயற்றியவர்களுள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரே வயதில் இளையவராவார். உமையம்மை இவருக்கு ஞானப்பால் ஊட்டிய நிகழ்ச்சியை ஆதிசங்கரர் தமது சௌந்தர்யலகரியில் அழகாக வர்ணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகளில் 383 பதிகங்கள். அன்று 2 3 புதியவகை சொல்மாலைகள் பலவற்றை யாப்பிலக்கணத்திற்கு உட்பட்டு அருளிச் சென்றுள்ளார். இத்திருப்பதிகங்கள் தமிழிலுள்ள பாடல்களுக்கெல்லாம் மூல இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவற்றைச் சித்திரக்கவிகள் எனவும் அழைப்பர். அவையாவன திடுயமகம், நாலடி, மேல்வைப்பு, மாலை மாற்று, ஏகபாதம், திருஎழுப்புற்றிருக்கை திருத்தாளச்சாதி, திருவிராகம், யாழ்முறி, மொழிமாற்று, திருயிருக்குக்குறள், ஈரடிமேல் வைப்பு, சுங்கரமாற்று, கோமுந்திரிகம் முதலியனவாகும்.

நாயன்மார்கள் பாடும்போது சொல்லும் யாப்பும் இசையும் ஒன்றாகவே சேர்ந்து வெளிவந்தன. இவ்வகைப் பாடல்கள் இசைப்பா வகையுள் அடங்கும்.

திரியமகம் என்பது ஓரடியில் வந்த சொல்லோ தொடரோ வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கிவருவது இதனை மடக்கு என்றும் சொல்வர்.

உதாரணம்:

உற்றுமை சேர்ந்து மெய்யினையே
உணர்ந்து நின்குன் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன் பணியே
அமரர்கள் செய்வதும் உன் பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே

அடுத்த நாலடி வைப்பபைப் பார்த்தால், நான்கு அடிகளான பாடலின் மேலாக இரண்டு அடிகள் வைக்கப் பெற்ற அமைப்பே உடையதாகும்.

உதாரணம்:

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன் கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரணே

ஒரு பாடலை முதலில் இருந்து படித்தாலும் அல்லது இறுதியிலிருந்து படித்தாலும் அதே பாடலாக அமையும்தன்மை பெற்ற பாடல் மாலை மாற்று எனப்படும். இப்பாடலுக்கு எளிதில் பொருள் காணமுடியாது.

யாமா மாநீ யாமாமா யாழிகாமா காணாகா
காணா காமா காழீயா மாமா யாழீ மா மாயா
நேரகாழா மித யாரழிதா யேனனி யேனனி ளாயழிகா

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

காழியுளா னினயே தாழிசயா தமிழாகரீண

ஏகபாதம் எனும் அங்கத்தை நோக்கும்போது முதல் அடிபோல் ஏனைய மூன்று அடிகளும் அமைந்திருக்கும் ஆனால், பொருள் வேறுபடும்.

பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்
பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்லாடம் எனும் நூலில் கல்லாடர் காரைக்காலம்மையார் முதல் நாயன்மார் ஈறாக அவரவர் பாடிய பதிகங்களையும் இசைக்கவிகள்பற்றியும் சிறப்பாகக் கூறுகின்றது.

இக்காலத்தில் நாயன்மார்களோடு ஆள்வார்களும் பலர் தோன்றி இசை வளர்த்தார்கள். தாம் கண்ட, அனுபவித்த இசைச் செய்திகைளை மக்கள் நுகரும் வண்ணம் தேனிசைப் பாடல்களாக சொரிந்தனர். அற்புதங்கள்பல செய்து இசையால் மக்களைக் கவர்ந்தனர். இவற்றிலிருந்து பார்க்கும்போது அக்காலத்தில் சங்கீதம் மிக உன்னத நிலையில் இருந்துள்ளது என அறியக்கிடக்கின்றது.

திருமதி மலர்விழி கனகசபை

(தொடரும்)

# பேஸ்புக் பாவனையில் இளையோரே அதிகம்

## சோசில் பேக்கர் இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 11 இலட்சத்து 13 ஆயிரத்து 680 பேர் பேஸ்புக் உபயோகிப்பதாக சோசில் பேக்கர் எனும் இணையத்தளமொன்று மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் இந்த இணையத் தளத்தைப் பயன்படுத்துவோர் வரிசையில் இலங்கை 76 ஆவது இடத்தை வகிக்கிறது. முதலிடத்தில் அமெரிக்கா உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது..

இலங்கையில் பெஸ்புக் பயன்படுத்தவோர் 5.18 வீதமாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்களே அதிகளவில் பேஸ்புக் பயன்படுத்துகின்றனர்.

65 வயதுக்கு மேற்பட்டோர் ஒரு வீதமாகவும் 25 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட் டோர் 32 வீதமாகவும் 35 வயதுக்கு இடைப்பட்டோர் 8 வீதமாகவும் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# அரச நிறுவனங்களில் உள்ளக கணக்காய்வு பிரச்சினைகள்

## பதிவாளர் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொரும்பாலான அரச நிறுவனங்களில் உள்ளக கணக்காய்வு பிரச்சினைகள் நிலவுவதாக பதிவாளர் திணைக்களம் தெரிவிக்கிறது.

அரச நிறுவனங்கள் பலவற்றிலும் நீண்ட கால திட்டமிடல் இல்லாத காரணத்தினால் பல்வேறு சிக்கல்கள் தோன்றுவதாக பதிவாளர் எச்.ஏ. சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனங்கள் பலவற்றிலும் கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உரிய முறையில் செயற்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிறுவனங்களிடம் காணப்படும் சொத்துக்களின் மூலம் உரிய பலன் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை எனவும் அவை வீணடிக்கப்படுவதாகவும் பதிவாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வருடாந்தம் தமது திணைக்கள அதிகாரிகள் அவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படுகின்ற போதிலும் அவை உரிய முறையில் பின்பற்றப்படுவதில்லை எனவும் பதிவாளர் திணைக்களம் தெரிவிக்கின்றது. (4-2)

# நீர்மின் உற்பத்தியில் 25 வீதத்தால் அதிகரிப்பு

நீர்மின் உற்பத்தியில் 25வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும் மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீரேந்து பகுதிகளில் மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை என சபையின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அனல்மின் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சி எதிர்பார்த்தளவு கிடைக்குமாயின் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 45 வீதம் அதிகரிக்கு மெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# குப்பைகளை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதி புகையிரதக் கடவைக்கு அண்மையில் பெருமளவிலான குப்பைகள் தேங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வேறு இடங்களில் இருந்து ஏற்றிவரும் குப்பைகளை இவ்விடத்தில் குவித்து அதன் பின்னரே அவற்றை அங்கிருந்து அகற்றுகின்றனர்.

குறித்த இடத்திலிருந்து மாநகர சபையினரால் வாரத்திற்கு ஒருமுறையே குப்பைகள் அகற்றப்படுவதோடு பிற இடங்களிலிருந்து சிலர் தமது வீட்டுக்கழிவுகளையும் இங்கு வீசிவிட்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுவதோடு அப்பகுதியில் வசிக்கின்ற மக்கள் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அத்துடன் மழை தொடங்கியுள்ள இக்காலத்தில் அப்பகுதியில் செ[illegible]வதென்பதே பெரும் சிரமமாக உள்ளது.

பிற இடங்களிலிருந்தும் சிலர் தமதுவீட்டுக்கழிவுகளை இங்கு வீசிவிட்டுச் செல்வதாகவும் எனவே உரிய தரப்பினர் தொற்று நோய்களின் அபாயம் இன்றைய நிலையில் தம் நிலையினைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (4-8)





THE WORLD'S LARGEST UNIVERSITY
Indira Gandhi National Open University (IGNOU) - Delhi
STUDY IN SRI LANKA

MBA
Master of Business Administration
General or in HRD, Finance, Banking, Operations, Marketing.
Eligibility criteria : A recognized University Degree or Professional qualification (CIMA, ACCA, CIM, Law, IPM, Engineering, Banking, Finance).
Duration: 30 Months
Rs. 39,036/=* per semester x 5

B.COM/BA
Bachelor of Commerce/Arts
General or in Accountancy, Finance, Economics, Public Administration, Corporate Affairs.
Eligibility criteria : A/Ls or BPP (Bachelor's Preparatory Programme - 6 months) for those without A/Ls or O/Ls
Duration: 36 Months
Rs. 28,177/= * per year x 3

The course fee structure is as per the SAARC norms, which is only 30% of the normal course fees applicable to other country students*

BPP
Bachelors Preparatory Programme
Minimum Requirement: Over 18 yrs of age
Course Period: 6 months
Course Fee: Rs.10,605 /=*

*Based on current exchange rates

FREE textbooks, IGNOU online live lectures and FREE counselling sessions by experienced university lecturers for all subjects.

Applications called for the 11th Intake
Register before 25th November

Other IGNOU Programmes are available on request

Registration Centers :
PUTTALAM-071 9070075
JAFFNA

Indira Gandhi National Open University

(C-4912)

www.ignou.ac.in,
www.i[illegible]ne.ac.in
HOTLINE - Colombo: 077 222 7393 (English, Tamil)

25 x 3



BCBS CAMPUS

298B, R.A. De Mel Mawatha,
Colombo-3.

Spot Admission With Representatives
(on 8th & 9th November 2011) At Jaffna

➤ சாதாரணதரசித்தி (O/Level) தகைமை இல்லாமலும் IELTS தகைமை இல்லாமலும் UK Visa களை பெறவும்,

➤ UK இல் கல்வி & வேலைவாய்ப்பு இரண்டையும் ஒரே நேரத்தில் தொடரவும்,

Degree & MBA Programs From UK Universities to Complete While Sri Lanka migration to Canada, Australia & Newzealand.
France Visa Can be Arranged

அழையுங்கள்:-
077 222 7393 - Nivetha (தமிழ்மொழி மூலம்)

(C-4912)

# இலங்கையிலுள்ள இந்திய கைதிகளை இந்தியாவுக்கு மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையுடனான கைதிகள் பரிமாற்ற விவகாரத்திற்கு முன்னுரிமை வழங்கவுள்ளதாகவும் இடமாற்றப்படவுள்ள கைதிகளின் விபரங்களை திரட்டுவதில் ஈடுபட்டுள்ளதாகவும் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கைதிகளை இடமாற்றுவது தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் கடந்த வருட இறுதியில் ஒப்பந்தமொன்றை செய்து கொண்டன.

தற்போது இலங்கைச் சிறைகளில் 40 இற்கும் அதிகமான இந்திய கைதிகள் உள்ளனர். ஏறத்தாள அவர்களில் அனைவரும் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களை கடத்திவர முயன்ற குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

பொதிகள் கொண்டு செல்பவர்களாக பணிக்கமர்த்தப்பட்டு இறுதியில் சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்த கதைகளையே ஏறத்தாழ இவர்கள் அனைவரும் கூறுகின்றனர்.

இலங்கையில் ஆயுள்தண்டனைக் கைதிகள் தமது வாழ்க்கையின் எஞ்சிய காலம் முழுவதும் சிறையில் கழிக்க வேண்டும். இப்பிராந்தியத்தின் ஏனைய பல நாடுகளைப் போல் தனது கரையோரங்களுக்கு போதைப் பொருட்கள் கொண்டுவரப்படுவதை எதிர்த்து போராடும் இலங்கை இவ்விவகாரத்தைக் கையாள்வதற்கு சட்டங்களை கடுமையாக்கியுள்ளது. இலங்கையில் போதைப்பொருள் குற்றத்திற்கு தண்டனைகள் குறைக்கப்படுவதற்கு சாத்தியம் இல்லை.

இந்நிலையில் இலங்கையிலுள்ள இந்திய கைதிகளை இந்திய சிறைக்கு மாற்றுவதற்கான சட்ட விவகாரங்கள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆராய்ந்து வருகிறது.

இந்தியாவில் சட்டம் ஒழுங்கு விவகாரம் மாநில அரசுக்குரியது என்பதால் மேற்படி கைதிகளின் சொந்த மாநிலங்களிலுள்ள சிறைகளுக்கு மாற்றுவதற்கு முன் அந்தந்த மாநில அரசுகளுடனும் மத்திய கலந்துரையாடப்பட வேண்டியுள்ளது. (4-2)

# இலங்கையுடனான வர்த்தக உறவுகள் வலுப்படுத்தப்படும்

## நோர்வே பிரதித்தூதுவர் ஜொன் ஓ பிரட்ஹொல்ட்

(கொழும்பு)

இலங்கையுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நோர்வே அறிவித்துள்ளது. இதுவரை காலமும் அபிவிருத்தி கூட்டுறவை மையமாகக் கொண்டே உறவு இலங்கையுடன் பேணப்பட்டு வந்ததாகவும் எதிர்வரும் காலங்களில் இந்த உறவு வர்த்தக ரீதியாக வியாபிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையுடன் வர்த்தக உறவுகளை பேணுவதில் நோர்வே ஆர்வம் காட்டி வருவதாக அந்நாட்டு பிரதித் தூதுவர் ஜொன் ஓ பிரட்ஹொல்ட் தெரிவித்துள்ளார்.

மீள் குடியேற்றம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு நோர்வே கூடுதலான உதவிகளை வழங்கியுள்ளதாகக் குறிப்பட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் மிகவும் வலுவான உறவுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.யதார்த்தமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் காத்திரமானஅரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்கும் முனைப்புக்களுக்கும் நோர்வே பூரண ஒத்துழைப்பு வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வே மண்ணில் சட்டவிரோதமான செயல்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலி செயற்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# கொலன்னாவ தேர்தல் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் மனுத்தாக்ல்

(கொழும்பு)

கொலன்னாவ நகரசபைக்கான தேர்தல் சட்டவிரோதமானது என தெரிவித்து அதன் முடிவுகளை இரத்துச் செய்யுமாறு கோரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொலன்னாவ நகரசபையின் எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.சந்திரசிறி டயஸ் இந்த மனுவைத்தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர், பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மற்றும் கொலன்னாவ நகர சபைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 15 உறுப்பினர்கள் இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மற்றும் அவரது ஆதரவாளர்கள் தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினம் முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு இடையூறு விளைவித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்த போதிலும் அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நாளை மறுதினம் மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (4-2)



சாவகச்சேரி புவேந்தன் பாலர்பகல் பராமரிப்பு நிலையத்தில் இல்ல மெய்வன்மை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி நகரமாதர் கிராம அபிவிருத்திச்சங்கசெயலாளர் திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி



பிறப்பு 05.11.1934

இறப்பு 07.10.2011

# குமாரசாமி சுந்தரமூர்த்தி

தந்தையாய் தாயாய் விளங்கினீர்கள்
தளர்வறியா நெறிகாத்தே வாழ்ந்தீர்கள்
சிந்தை மகிழும் பிள்ளைகளைப் பெற்றீர்கள்
சிறந்த நல் மருமக்களைக் கண்டீர்கள்
எந்த வேளையிலும் உடன் பிறந்தோர் உறவினருக்கு
ஏற்ற உதவிகளைப் புரிந்து வந்தீர்கள்
விந்தைகள் புரிந்த தாத்தா வென்றழைத்து மகிழும்
விருப்பு மிகு பேரர்களைக் கண்டீர்கள்
நிறை புக்கோர் நிலையமாய் விளங்கினீர்கள்
நெடுமறைப் பொருளாய் விளங்கினீர்கள்
துறைதொறும் சோதியாய் ஆனீர்கள்
தொன்மை பண்புடன் விளங்கி உயர்ந்தீர்கள்
இறையருள் ஆணையேற்ற வாழ்ந்தீர்கள்
இன்றெம்மை யெல்லாம் விட்டு எங்கு சென்றீர்கள்
காரைநகரில் பிறந்து வளர்ந்து வந்தீர்கள்
கம்பளையில் உயர்ந்து வாழ்வை நிறைத்தீர்கள்
வாழ்க்கைத் தேரில் வலம் வந்து தரிசனம்
கொடுத்து அருள் தந்து அரவணைத்து வாழ்ந்த
தெய்வமே ஐயாவே அரனடியில் சேர்ந்து
வாழ அஞ்சலிக்கின்றோம்

குறிப்பு:- அமரர் குமாரசாமி சுந்தரமூர்த்தி அவர்களின் அந்தியோட்டிக் கிரியைகள் 04.11.2011 வெள்ளிக்கிழமை கொழும்பு முகத்து வாரத்தில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் 06.11.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

பிரிவுத்துயரில் வாடும்
மக்கள், மருமக்கள், பிள்ளைகள்.
113/6, கண்டிவீதி, கம்பளை.

(ஆ-4483)

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்



9

## ஏன் மறைத்தார் சிவராசன்?

அரிபாபு நினைவுகளை என்னால், அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட முடியாது! அவரைப் போல் சிவ ராசன் என்னை அழைத்திருந்தாலும் அன்றைக்கு ஸ்ரீபெரும்புதூருக்கு நானும் போயிருப்பேன். அங்கே அரிபாபுவுடன் நானும் சிதறிச் செத்திருந்தாலும், தினம் தினம் இன்றைக்கு இவ்வளவு உளைச்சலுக்கு ஆளாகி சாகவேண்டிய நிலை வந்திருக்காது.

சம்பவ இடத்திற்குப் போயும் உயிர்தப்பியவள் என் மனைவி நளினி. "ராஜீவ் காந்தியை கொலை செய்யப் போகிறார்கள் என்பது நளினுக்குத் தெரியாது. சுபாவும் தனுவும் இலங்கைத் தமிழில் பேசினால், சந்தேகம் வரும் என்பதால்தான், தமிழ் பெண்ணான நளினி அவர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார்" என அரசுதரப்பு ஆவணங்களிலேயே எழுதப்பட்டுள்ளது. சம்பவத்தை நிறை வேற்றும் கடைசிக்கணத்தில் கூட தனது திட்டத்தை சிவராசன் சொல்லவில்லை. என்பது இதிலிருந்தே அப்பட்டமாகத் தெரிகிறது. "நளினிக்குத் தெரியாமல் அது எப்படி நடந்திருக்கும்?" எனக் கேட்பவர்களும் இருக்கிறார்கள்.

ஸ்ரீபெரும்புதூர்க் கூட்டத்திற்கு போனபோது, நளினியின் வயிற்றில் கரு 'உருவாகி இருந்த நேரம். வெடிச்சத்தங்கள் கேட்டால்கூட் விபரீதம் என்கிற நிலையில்... அப்படி ஒரு சம்பவம் நடக்கும் எனத்தெரிந்திருந்தால், எப்படி நளினி அங்கே போயிருப்பார்? எங்கள் காதலின் அடையாளச் சின்னத்தை நாங்கள் எப்படிப் பூரிப்போடும் பெருமிதத்தோடும் பார்த்தோம் என்பது எங்களுக்கு மட்டுமே தெரியும். கரு உருவாகி வளர்வது தெரிந்து, வயிற்றின் சிறுமேடு தடவிச் சிலிர்த்த கணங்களை நினைத்துப் பார்க்கிறேன்.

ஸ்ரீபெரும்புதூர் பொதுக் கூட்டத்திற்கு ராஜீவ்காந்தி வருகிறபோது அலையடித்த மக்கள் கூட்டத்தை வேடிக்கை பார்த்தபடி நின்றவள் நளினி. நல்லெண்ண அடிப்படையில் ராஜீவ் காந்திக்கு தனு மாலை அணிவிப்பதும், அதைப் புகைப்படம் எடுப்பதும்தான் சிவராசன் நளினியிடம் சொல்லியிருந்த தகவல். ராஜீவ்காந்தி வந்தபோதோ, மக்கள் ஆரவாரித்தபோதோ இப்படி ஒரு சம்பவம் நடக்கப்போகிறது என்பது நளினிக்குத்தெரியாது. பதற்றமோ பரபரப்போ இல்லாமல் மிகச் சாதாரணமான முகபாவத்தோடு சிவராசன் இருந்திருக்கிறார். "ராஜீவ்காந்திக்கு மாலை அணிவிப்பது மட்டுமே வேலை" என்பதை நம்பவைக்க பல நாடகங்களையும் அவர் நடத்தியிருக்கிறார். அவருக்கு எதிராக நான் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம். நிகழ்ந்த உண்மைகளை இறக்கிவைக்கின்ற நேரம் இது.

சிவராசன் செயற்பாட்டில் நல்ல எண்ணம் இருந்தது என்பதை நான் நம்புவதற்கு காரணம் என்ன? அந்த எண்ணத்தில் செயற்பட ஒருதமிழ் நாட்டுப்பெண்ணின் உதவி எதற்கு? சிவராசன் என்னிடம் உண்மை நோக்கத்தை மறைப்பதில் உறுதியாக இருந்தமைக்கு காரணம் என்ன? எனப்பல கேள்விகள் உங்களிடத்தில் இருந்து எழலாம்.

"என்னைவிட சிவராசன் புலிகள் இயக்கத்தில் மூத்த உறுப்பினர். எனக்கு இங்கு ஒரு கமாண்டராகவும் பாஸ் ஆகவும் இருந்தார்!" இது அரசு தரப்பே [illegible]ால்லும் விளக்கம். ஒரே இயககத்திலுள்[illegible] என்போன்ற கீழ் நிலயிலுள்ளவர்கள், மேல் நிலையிலுள்ள ஒருவரை எப்படிச் சந்தேகப்பட முடியும்? இயக்கம் கற்றுக்கொடுத்த கட்டுப்பாடும் பக்குவமும் மேல் நிலையில் உள்ளவர்களை சந்தேகப்பட வைக்குமா? மேல் நிலையில் உள்ள சிவராசனிடம், "ஏன்...எதற்கு.. எப்படி" என்கிற சந்தேகங்களைக் கேட்பது சாத்தியமா? "ராஜீவ்காந்தியிடம் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" என சிவராசன் சொல்கிறபோது, அதில் சந்தேகப்பட ஒன்றுமே இல்லை. காரணம், ராஜீவ்காந்தி இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பியதும் அவர்களின் வெறியாட்டங்கள் எங்கள் மண்ணையும் மக்களையும் துண்டாடியதும், அதனால், அவர்மீது எங்கள் மண் ஆற்றமுடியாத ஆத்திரத்தில் இருந்ததும் எல்லோரும்அறிந்ததுதான். மறுபடியும் ராஜீவ்காந்தியுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசியல் ரீதியான காரணங்கள் இருக்கலாம். அவருக்கு மாலை அணிவக்கும் நிகழ்வு நல்லது என நம்பியதால்தானே, சிவராசன் சொன்னதற்கு எல்லாம் நாங்கள் தலையாட்டினோம். ராஜீவ் காந்தியைக் கொல்ல வந்த சிவராசன் உன்னை ஏன் சந்திக்க வேண்டும்?" என்கிற கேள்வியும் உங்களிடத்தில் இருந்து எழலாம். இப்போது இருக்கும் சூழல் அன்றைக்குத் தமிழகத்தில் இல்லை. உணர்வாளர்களின் எழுச்சியான முன்னெடுப்புக்கள் விடுதலைப்புலிகள் மீதான கெடுபிடிகளையும், கண்காணிப்புக்களையும் குறைய வைத்திருக்கின்றன. ஆனால், அன்றைக்கு புலி உறுப்பினர்கள் தமிழகத்தில் உலவுவது சாதாரண காரியம் இல்லை. மறைமுகமாகவும் இரகசியமாகவும் செய்ய வேண்டிய இக்கட்டுக்கள் அப்போது இருந்தன. கோடம் பாக்கத்தில் நடந்த பத்மநாபா கொலைக்குப்பின் இந்தியாவிலிருந்த விடுதலைப்புலிகள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர் என உச்சநீதிமன்றத் தீர்ப்பிலேயே எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் இந்தியராணுவத்திற்கும் (மிறிரிதி) விடுதலைப்புலிகளுக்கும் சண்டை நடந்ததும் அத்தகைய கெடுபிடிகளுக்கு மிகமுக்கிய காரணம். கண்பாணிப்புகள் அதிகம் இருந்த அப்போதைய காலச் சூழலில் எந்த அரசியல் தலைவருக்கும் பொதுமேடையில் மாலை போடுவது சுலபமல்ல. அதுவும் இலங்கைத்தமிழர் என்றால் சொல்ல வேண்டியதே இல்லை. எத்தகைய காரணத்ந்தச் சொன்னாலும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழகக் காவற்றுறை இரக்கம் காட்டாது. இலங்கைத்தமிழர் எனத் தெரிந்தாலே "நீபுலி இயக்கத்தைச் சேர்ந்தவன் தானே... யாரைக் கொலைசெய்ய இங்கே வந்தாய்... பெற்றோல் கடத்த வந்தாயா? பால்ரஸ் கொண்டு போக வந்தாயா?" எனத் துளைத்து விடுவார்கள். அதனால், சிவராசன், தனு, சுபா மூவராலும் எந்தப் பொதுக்கூட்டத்திற்கும் போய் மாலை அணிவிக்க சாத்தியம் இல்லை. தமிழ் நாட்டுப் பெண்ணொருவர் உடனிருந்தால், அதற்கு உதவியாக இருக்கும் என்பதை சிவராசன் சரியாக திட்டமிட்டிருந்தார். அதற்குத்தான் அவர் எங்களைப் பயன்படுத்த நினைத்தார். இந்தியாவின் ஆதரவு இன்றி ஈழத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வாய்ப்பே இல்லை. அதற்காக இந்திய தேசிய அரசியற் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவது எமக்கு அவசியம். அந்த வேலைகளில் நான் தீவிரமாக இருக்கிறேன். எனச் சிவராசன் என்னிடம் சொன்னார். அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அந்தக் கருத்தில் நான் மட்டும் எப்படி பிறழ்வு காட்ட முடியும்? இந்திய அரசியற் கட்சிகளின் ஆதரவைப் பெறுகிற அளவுக்கு அவர்கள் முன்வந்திருப்பதில் அப்போது எனக்கு ஏகோபித்த மகிழ்ச்சி. அதைத் தாண்டிய சந்தேகங்கள் எனக்கு ஏற்பட வில்லை. புலிகள் இயக்கத்தின் கொள்கை குறித்த ஆராய்வுகளையோ, இந்திய தேசிய அரசியற் கட்சிகளின் நிலைப் பாடுகள் குறித்த பேரறிவோ எனக்கு அப்போது இல்லை. காரணம் அப்போது எனக்கு வயது 20. இளம் பருவத்தில் அடியெடுத்து வைத்த என்னால், அப் போது எந்த அளவுக்கு சிந்தித்திருக்க முடியும் என்பதை மட்டும் மனக் கண்ணில் நிறுத்திப்பாருங்கள்.

"ராஜீவ்காந்தியைக் கொல்லப் போகும் விடயத்தை சிவராசன் முருகனிடம் ஏன் மறைக்க வேண்டும்? புலிகள் இயக்கத்தைப்பற்றி நன்கு அறிந்த முருகனிடம் ராஜீவ் கொலை குறித்து சிவராசன் இரகசியம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை..." எனப் புலனாய்வை மட்டுமே புத்தியாக வைத்திருப்பவர்கள் கேள்வி கேட்கலாம். சந்தேகப்படுவதும் கேள்வி எழுப்புவதும்தான் இங்கே மிகச் சுலபமான வேலை. நம்முடைய கேள்வி அடுத்தவர் மனதை எப்படித் துன்புறுத்தும் என நெஞ்சுக்குள் ஒருகணம் நினைத்துப் பார்க்கிற பழக்கம் குறைவாகிவிட்டது. சிவராசனைப்பற்றி இதுகாலம்வரை நான் வெளிப்படையாகப் பேசவில்லை. இறந்தவர்களை நோக்கிக் கைகாட்டுவது ஈனத்தனம் என்பதை இறக்கும் சூழலில் இருக்கிற நான் நன்றாகவே உணர்ந்திருக்கிறேன். "ராஜீவ்காந்தியைக் கொலை செய்ய சிவராசன் ஏன் வந்தார். அவரை இங்கே அனுப்பியவர்கள் யார்? அவருடைய கண்களில் நான் ஏன் சிக்கினேன்" இதற்கெல்லாம் என்னிடம் பதில் இல்லை. ஆனால், சிவராசன் என்னிடம் ராஜீவ் கொலைச் சதியை மறைப்பதற்கு இரண்டு காரணங்களை என்னால் சொல்லமுடியும். ஒன்று சிவராசன் என்னை நம்பவில்லை; என்மீது அவருக்கு அதிருப்தி இருந்தது. இரண்டாவது, இந்த சதித்திட்டம் மிகவும் பாரதூரமானது. சிறிய அளவில் கசிந்தாலும் குறிக்கோள் நிறைவேறாமற் போகும்; அத்தோடு மட்டுமல்ல... அதன் பிறகு சம்பந்தப்பட்ட ஆளை நெருங்கவே முடியாத அளவுக்கு போய்விடும். சிவராசனின் பின்னணியில் தோண்டப்பட்டு அதன் மூலமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பேராபத்து நிகழவும் வாய்ப்பு இருக்கிறது. அதனால்தான் ராஜீவ்காந்தி கொலைச் சதியை மிகுந்த இரகசியத்தோடு சிவராசன் காத்துவந்தார். இலக்கை மிகச்சரியாக நிறைவேற்றிவிட வேண்டும் என்கிற தீவிரமும் எச்சரிக்கையுமே அவரிடம் இருந்தது. யார் மனமெல்லாம் நோகும் என்பதை உணரும் நிலையில் அவர் இல்லை. எந்தவொரு திட்டத்தையும் மிகமிக முக்கியமானவர்களுக்கு இடையிலும், அதை நேரடியாக செயற்படுத்துபவர்களுக்கு இடையிலும் மட்டுமே பகிர்ந்து கொள்வது, ஒவ்வோர் இயக்கத்திலும் பின்பற்றக் கூடிய வழக்கம் தான். அநாவசியமாக ஒரு நபரிடம் விடயம் கசிந்தாலும் அது திட்டத்திற்கான பின்னடைவ[illegible] அமைந்துவிடும் என்பதுதான் சதிக்கு[illegible] வின் பாலபாடம். இதை ஒட்டிய கருத்துக்களை நீதிபதி தாமஸ் அவர்களே தீர்ப்புப் பக்கங்கள் 84,85, இல் கூறியிருக்கிறார். அத்தோடு "எல்.ரி.ரி.ஈ இனர் தாம் இலங்கைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்தியாவில் தமது அடைாளத்தை மறைத்துச் செயற்படுத்துகின்றனர்!" என்று நீதிபதி தாமஸ் அவர்கள் கூறியிருக்கிறார். இதையெல்லாம்விட தீர்ப்பில் மிக முக்கியமான பகுதி ஒன்று இருக்கிறது. "முருகனுக்கும் நளினிக்கும் இருந்த இரகசிய உறவை அறிந்த சிவராசன் அதுபற்றி மேலிடத்திற்குப் புகார்செய்தார். அதனால், முருகனை நம்பக்கூடாது என்றும் மேலிடத்திற்கு சிவராசன் செய்தி அனுப்பினார்!" எனத் தீர்ப்பு பக்கம் 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவராசனுக்கும் எனக்கும் சரியான இணக்கம் இல்லை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை. ஒரு விடுதலைப்புலி உறுப்பினர் பெண்களுடன் உறவு வைத்திருப்பது மிகவும் ஆபத்தானது என்பது அந்தக்காலகட்டத்தில் அனைவரும் அறிந்திருந்த ஒன்று. பொதுக் கூட்ட இடத்தில் சுபாவோ, தனுவோ பேசக்கூடாது அவர்களுக்காக நளினி தான் பேசி ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க அனுமதி வாங்க வேண்டும். சுபாவும் தனுவும் இலங்கைத் தமிழர்கள் என்பது அங்கு யாருக்கும் தெரிந்துவிடாமல் இருக்க நளினி அவர்களை மறைத்தபடி நிற்கவேண்டும்!" என அரசதரப்பு வாதம் சொல்கிறது.

21.05.91 அன்று மாலை சிவராசன் குழுவுடன் ஸ்ரீபெரும்புதூர் செல்ல நளினி உடன்பட்டார் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ளது. உண்மையிலேயே நளினிசுய விருப்பத்துடன்தான் சிவராசன் குழுவுடன் ஸ்ரீபெரும்புதூர் சென்றாரா?

ஜூனியர் விகடன்

## பாதாள உலக கோஷ்டியினரை பயன்படுத்தி பிரமுகர் ஒருவரை கொலை செய்யலாமா?

### பொன்சேகா கேள்வி



(கொழும்பு)

பாதாள கோஷ்டியினரைப் பயன்படுத்தி பிரமுகர் ஒருவரை கொலை செய்ததோடு பிரமுகர் பாதுகாப்பு பிரிவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உலகில் வேறு எங்கே இவ்வாறு நடைபெறுகின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டுமாயின் இத்தகைய நபர்களை விரட்டியடிக்க வேண்டும் எனவும் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஹைக்கோப் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இராணுவ நீதிமன்றத்தில் பிரிகேடியர் ஆர்.டி.உடவத்த அளித்த சாட்சியத்தின் 25 பகுதிகளை சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி சாலிய பிரீஸ் மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சுட்டிக்காட்டினார்.

ஹைக்கோப் சம்பவம் தொடர்பில் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கின் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சாட்சியங்களும் மேல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சாட்சியங்களும் சமமானவை என்பதை நிரூபிக்கும் வகையில் சட்டத்தரணி இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இந்த வழக்கு மீதான மேலதிக விசாரணை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (4-2)

## போருக்கான காரணங்களுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை

### பேராசிரியர் கே.கருணாதிலக்க தெரிவிப்பு

(கொழும்பு)

போர் ஏற்படுவதற்கான காரணங்களுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை என களனி பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பேராசிரியர் கே.கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுறுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளது. எனினும் போருக்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு தீர்வு வழங்கும் முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

போர் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு தீர்வு வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை.

நாம் கிரமமான பிரச்சினையிலிருந்து விடுபட்டு வேறு திசையில் பயணம் செய்ய ஆரம்பித்துள்ளோம். இவ்வாறான ஓர் நிலைமை மற்றுமொரு போரைத் தூண்ட வழிகோலும் வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

சமூகத்தின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு தீர்வு வழங்குவதே மிகவும் பொருத்தமானதாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சரியான சமூகப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி நாட்டை நல்வழிப்படுத்தும் பாரிய பொறுப்பு சிவில் சமூகத்தைச் சேர்ந்த மக்களைச் சாரும் என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

## பாரியளவு நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கை பிரஜைகள் முப்பது பேருக்கு பிடிவிறாந்து

### இன்டர்போல் உத்தரவு

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த 30 பேருக்கு இன்டர்போல் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளது. குறித்த இலங்கைப் பிரஜைகள் பாரியளவு நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் ஆறு பேர் பெண்கள் எனவும் இரண்டு வர்த்தகர்கள், ஒரு சட்டத்தரணி உள்ளிட்டோருக்கு எதிராகவும் சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 பேரில் பதினாறு பேர் சிங்களவர்கள் எனவும் குருநா கல், கொழும்பு, திருகோணமலை, வவுனியா மற்றும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் போதைப் பொருள் வர்த்தகர்களும் அடங்குவதாகக் குறிப்பிடப்படுகின்றது. (4-2)

### நீதிமன்ற வழக்குகள் திகதி மாற்றம்

பொது விடுமுறை தினமான நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த சகல வழக்குகளும் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றநீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா அறிவித்துள்ளார். (4-3-29)

## 2011.11 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1632-முப்பதாண்டுப் போரில் சுவீடனின் பேரரசன் குஸ்டாவஸ் அடொல்பஸ் உயிரிழந்தார்.

★ 1759- பாளையக்காரர் பூலித்தேவரின் நெற்கட்டான் செவ்வலைக் கோட்டையை இசபல்கான் கான் சாகிப் என்பவனின் படைகள் வெடிகுண்டுகள் கொண்டு தாக்கின. ஆனாலும் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை.

★ 1844-டொமினிக்கன் குடியரசின் முதலாவது அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது.

★ 1860-ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே குடியரசுக் கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதியாவார்.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்குத் தலைவரானார்.

★ 1891-இலங்கை ஸ்டீம்ஷிப் கம்பனிக்குச் சொந்தமான நீராவிக் கப்பல் லேடி ஹவ்லொக் முதன் முறையாக கொழும்பு வந்தடைந்தது.

★ 1913-தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி இந்திய சுரங்கத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டார்.

★ 1918-போலந்தில் இரண்டாவது போலந்து குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1935-எட்வின் ஆம்ஸ்ட்ரோங் பண்பலை ஒலிபரப்பு பற்றிய ஆய்வை வெளியிட்டார்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தனது முப்பதாண்டு கால பதவியில் இரண்டாவது தடவையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஜேர்மனியின் தாக்குதலில் 3 இலட்சத்து 50 ஆயிரம் சோவியத் வீரர்கள் உயிரிழந்தாலும் ஜேர்மனியர்கள் தமது 4.5 மில்லியன் பேரை இழந்திருப்பதாகவும் சோவியத் வெற்றி கண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

★ 1943-இந்தியாவின் வங்காளத்தில் நவகாளியில் இடம்பெற்ற இந்து , முஸ்லிம் கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக மகாத்மா காந்தி கொல்கத்தாவில் இருந்து நவகாளி வந்து சேர்ந்தார்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: ரஷ்யா உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றினர். ஜேர்மனியினர் நகரை விட்டு விலகும் போது நகரின் பல பகுதிகளை சேதமாக்கினர்.

★ 1944-புளூட்டோனியம் முதற் தடவையாக உருவாக்கப்பட்டது. பின்னர் ஜப்பானில் கொழுத்த மனிதன் அணுகுண்டு போடுவதற்கு இது பயன்பட்டது.

★ 1962-ஐ.நா. பொதுச்சபை தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

★ 1963-வியட்நாம் போர்: நவம்பர் முதலாம் திகதி இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து இராணுவத் தலைவர் டோங் வான் மின் தெற்கு வியட்நாமின் ஜனாதிபதியானார்.

★ 1965-ஐக்கிய அமெரிக்காவுக்கு குடியேற விரும்பிய கியூபா நாட்டினரை விமானம் மூலம் அங்கு கொண்டு செல்ல கியூபாவும் ஐக்கிய அமெரிக்காவும் உடன்பட்டன. இதன் படி 1971 இற்குள் 2 இலட்சத்து 50 ஆயிரம் கியூபர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

★ 1977-ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 39 பேர் கொல்லப் பட்டனர்.

★ 1985-கொலம்பியாவில் இடதுசாரி தீவிரவாதிகள் நீதிக்கட்டடத்தைக் கைப்பற்றி 11 நீதிபதிகள் உட்பட 115 பேரைக் கொன்றனர்.

★ 1999-அவுஸ்திரேலியர்கள் அனைத்து மக்கள் வாக்கெடுப்பு மூலம் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் தொடர்ந்திருக்க சம்மதம் தெரிவித்தனர்.

**பிறப்பு**

★ 1979-லமார் ஓடம், அமெரிக்கக் கூடைப்பந்தாட்டக்காரர்

**இறப்பு**

★ 1893-பீற்றர் சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (பி. 1840)

**சிறப்பு நாட்கள்**

★ டொமினிக்கன் குடியரசு- அரசியலமைப்பு தினம் (1844)

★ தஜிகிஸ்தான்- அரசியலமைப்பு தினம் (1994)



★ 1861-கூடைப்பந்து கண்டு பிடிப்பாளர் ஜேம்ஸ் நைஸ்மித் பிறந்த தினம்(இ.1939)

# DHL எக்ஸ்பிரஸ் சேவை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிப்பு

உலகின் முன்னணி சர்வதேச Express சேவைகளை வழங்கும் *DHL* எக்ஸ்பிரஸ், தனது புதிய சேவை நிலையத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது.

இதன்மூலம் வடபகுதியைச் சேர்ந்தவர்களுக்கு Express Shipping பொதி சேவைகளை வழங்க நிறுவனம் முன்வந்துள்ளது.

*DHL* எக்ஸ்பிரஸ் நிறுவனம் இலங்கையில் சுமார் 30 ஆண்டு காலமாக தனது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் சேவை நிலையமானது வடக்கு கிழக்கில் நிறுவப்பட்டுள்ள முதலாவது சேவை வழங்குநர் நிலையமாகும்.

இந்த சேவை நிலையத்தின் மூலம் *DHL* Express Global வலையமைப்பு நிலையத்தைச் சோந்த 220இற்கும் அதிகமான நாடுகளுக்கு விரைவாகவும், நம்பிக்கையுடனும் பொதி அனுப்பல் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் இந்த சேவை நிலையத்தின் மூலம் விசேட சேவைகளான குறுகிய காலப் பகுதியில் சென்றடையக் கூடிய ஆவண ங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க வர்த்தக



தேவைகளை நிவாத்தி செய்து கொள்ளக்கூடிய பொதியிடல் வசதிகளை *DHL* Express Easy Box மற்றும் Flyers போன்றனவும் வழங்கப்படுகின்றன.

*DHL* சேவை நிலையமானது கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ளது.




# யாழ்.மாநகரசபை வளாகத்தில் இலங்கை வங்கி அலுவலகம் திறப்பு

இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளையினால் யாழ். மாநகரசபை வளாகத்தில் வங்கி அலுவலகமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வங்கி அலுவலகத்தைத் திறந்துவைத்த யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இந்த அலுவலகத்தில் 21ஆயிரம் ரூபாயை வைப்புச் செய்துள்ளார்.

யாழ்.மாநகர சபை ஊழியர்களின் பண வைப்புக்காகவும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் இந்த வங்கி அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் யாழ்.மேற்தர கிளை முகாமையாளர், இலங்கை வங்கி ஊழியர்கள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# ஒக்டோபரில் பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண்ணினால்(2006/07) அளவிடப்பட்டவாறு தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட பணவீக்கம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், செப்ரெம்பரின் 6.4 சதவீதத்திலிருந்து ஒக்டோபரில் 5.1சதவீதத்திற்கு தொடர்ந்து மூன்றாவது மாதமாக வீழ்ச்சியடைந்தது.

ஆண்டு சராசரி பணவீக்கமும் முந்தைய மாதத்தின் 7.2 சதவீதத்திலிருந்து ஒக்டோபரில் 7.1சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இதுபோன்று 2011 செப்ரெம்பருடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு மற்றும் ஆண்டுச் சராசரி ஆகிய இரண்டு அடிப்படைகளிலும் மையப் பணவீக்கம் முறையே 5.6 சதவீதத்துக்கும் 7.5 சதவீதத்துக்கும் வீழ்ச்சியடைந்தன.

அதேவேளை மாதாந்த சுட்டெண்ணினால் எடுத்துக் காட்டப்பட்டவாறு சுட்டெண் உண்மை நியதிகளில் 151.7இலிருந்து 151.5க்கு வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக பொதுவான விலைமட்டம் முன்னைய மாதத்தினைவிட ஒக்டோபரில் 0.1 சதவீதம் கொண்ட வீழ்சசியை பதிவு செய்தது.

சுட்டெண்ணில் ஏற்பட்ட மாதாந்த வீழ்ச்சிக்கான பங்களிப்பு, உணவு மற்றும் வெறியமல்லா குடிவகைகளின் (0.4 சதவீதம்), துணைவகையின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்தே கிடைத்தது.

# சிடிபி-ன் 2011/12 முதல் அரையாண்டு இலாபம் அதிகரிப்பு

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல் .சி. (CDB) நிறுவனம் 2011/12 நிதியாண்டின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் தொடர்ந்தும் தனது உறுதியான செயற்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட தரவுகளின் படி, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட குறித்த காலப் பகுதியில் வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் ரூ.241 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், முன்னைய வருடத்தின் அதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 141% அதிகரிப்பாகவும் காணப்படுகின்றது.

2011 மார்ச் 31-ம் திகதியில் இருந்தவாறான ஐந்தொகையுடன் ஒப்பிடுகையில் தற்போதைய ஐந்தொகை 31% அதிகரித்து '13.38 பில்லியன் ரூபாயாக உயர்மட்டத்திலான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், வைப்புத்தளம் 26 சதவீதத்தினால் அதிகரித்து 9.4 பில்லியன் ரூபாயை பதிவு செய்தமையும் ஐந்தொகையின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

நிறுவனத்தின் தேறிய வட்டி வருமானம் 51% என்ற ஆரோக்கியமானதொரு அதிகரிப்பினை பதிவு செய்து 552மில்லியன் ரூபாயாகியது. 2011 செப்ரெம்பர் 30-ம் திகதி முடிபடைந்த 6 மாத காலப் பகுதியில் சிடிபி நிறுவனம் EPS (ஒரு பங்குக்கான உழைப்பு) ரூ.5.57 இனை பதிவு செய்வதற்கும், அத்துடன் 2011 செப்ரெம்பர் 30-ம் திகதியின்று இருந்தபடி ஒரு பங்குக்கான புத்தகப் பெறுமதி ரூ.36.66 ஆக பதிவு செய்வதற்கும் இவ்வாறான சிறந்த செயற்பாடுகளே காரணமாக அமைந்தன என சிடிபி நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிதியியல் அதிகாரியுமான தமித் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

# இணைய வேகத்தை பரிசீலிக்க வசதி

இணைய சேவையின் வேகத்தை பரீட்சித்து பார்க்கக் கூடிய வகையில் சகல புரோட் பாண்ட் (Broad band) இணையத்தள சேவை களையும் மேம்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இணைய வேகத்தை பாவனையாளர்கள் தாமாக அறிய இந்த புதிய முறை உதவுமென ஆணைக் குழு கூறியுள்ளது.

பாவனையாளர்க்கு தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் http://www.speedtest.trc.gov.lk/TRCspeed/broadband.php எனும் இணைய பக்க இணைப்பு ஊடாக இணையத்தளத்தின் வேகத்தை இலகுவாக அறியலாம் என அறிவிக்கப்படுகிறது.

தமது இணையத்தள இணைப்பு வேகத்தை அறிய முடியாததால் பாவனையாளர்களுக்கு முகம் கொடுக்க நேரிட்ட சிக்கல் இதன்மூலம் தீரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பங்குச்சந்தை தொடர் சரிவுக்கு காரணம் இலங்கை மீதான சர்வதேச அழுத்தம்?

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை கடந்த வாரம் வெள்ளிக்கிழமை சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6348.44 ஆகவும், மிலங்கா 5661.89 ஆகவும் அமைந்திருந்தன. முந்தைய வாரங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த வாரம் பிரதான சுட்டிகள் சற்று அதிகரித்திருந்தாலும் முந்தைய வாரங்களில் சுட்டி வீழ்ச்சியையே காண்பித்திருந்தது. இதனடிப்படையில் கடந்த 22 மாதங்களில் மிக மோசமான பங்கு சுட்டிகளாகவும், பங்கு புரள்வு இடம்பெற்ற வாரமாகவும் கடந்த வாரத்திற்கு முந்தைய வாரக் கொடுக்கல் வாங்கல்கள் பதிவாகியிருந்தன.

கடந்த சில வாரங்களாக பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அரசியல் பிரமுகர்களுடன் தொடர்புபட்ட சூடான சில தகவல்கள் வெளியாகியிருந்தன. குறித்த ஓர் அரசியல் பிரமுகர் பங்குச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் வீழ்ச்சி ஏற்படுவதற்கு காரணம் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மற்றும் மறைந்த பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர ஆகியோருக்கிடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதல் நிலையே எனும் கருத்தை வெளியிட்டிருந்தார். ஆயினும் சந்தை நடவடிக்கைகளை தொடர்ந்து அவதானிக்கும்போது இந்த மோதலுக்கும் பங்குச்சந்தைச் சரிவுக்கும் தொடர்புகள் இருக்கின்றது எனும் ஊகத்துக்கு கூடி வரமுடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் கடந்த சில வாரங்களாக பங்குச்சந்தையில் நிலவிய வீழ்ச்சியான நிலை உலக நாடுகள் இலங்கை மீது மேற்கொண்டுவரும் போர்க்குற்ற அழுத்தம் இந்தப் பின்னடைவுக்கு காரணமாக இருக்கலாம். இதனாலேயே வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடைந்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.42 | 111.05 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.54 | 178.55 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 150.12 | 154.21 |
| சுவிஸ் பிராங் | 123.36 | 127.39 |
| கனேடிய டொலர் | 107.47 | 110.69 |
| அவுஸ்திரேலிய டொலர் | 112.71 | 116.42 |
| சிங்கப்பூர் டொலர் | 85.79 | 88.25 |
| ஜப்பான் யென் | 1.39 | 1.43 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.25 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6348.44 | 6406.52 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5661.89 | 5698.85 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 6,498.00

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** இன்பிறாசக்சர்(180.00),செரண்டிப் லான்ட் (2230.00),கல்மஷு(2850.00),யூனியன் கெமிக்கல்(880.00), யூனியன் அசுரன்ஸ்(110.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** பேருவள வோல்இன்(160.00), கூஜே(146.00),விம்புத் லங்கா(45.20),சிலோன் பேவரஜ்(380.50), ஹேலீஸ்-எம்ஜிரி (30.70).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# 36 நிறுவனங்களை தேசியமயமாக்க நடவடிக்கை!

இலங்கையில் பல தனியார் சொத்துக்கள் மற்றும் நிறுவனங்களை அரசுடமையாக்குவதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிக்கலுக்குரிய நிறுவனங்கள் செயற்திறன் அற்று இருக்கின்றன என்று அதிகாரிகள் கூறும் அதேவேளை

இந்த நடவடிக்கை சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கையிலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்யும் என்று வணிகத்துறை முக்கியஸ்தர்கள் சிலர் கூறுகின்றனர்.

இந்த வாரம் நாடாளுமன்றத்திற்கு வரலாம் என எதிர்பார்க்கப்படும் குறித்த சட்டத்தின் அடிப்படையில், சரியாக செயற்படவில்லை என்ற கூறப்படுகின்ற 36 வணிகங்கள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும். இதில் கொழும்பின் முக்கிய ஹோட்டல்களில் ஒன்றான ஹில்டன் ஹோட்டலை வைத்திருக்கும் நிறுவனமும், நகரின் முக்கியமான காணிகளை தம்வசம் வைத்திருக்கும் ஒரு நிறுவனமும் அடங்குகின்றன.

இவற்றில் குறைந்த பட்சம் ஒரு நிறுவனம் எதிர்க் கட்சி அரசியல் வாதிக்கு சொந்தமானதாகும்.

இது எதிர்காலத்தில் மேலும் தேசியமயமாக்கலுக்கு வழி செய்யும் என்றும் எதிர்க் கட்சிகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

செயத்திறன் குறைந்த நிறுவனங்கள் நாட்டில் பொருளாதாரத்தில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதால் மக்களின் நலனை முன்னிட்டு 1950ஆம் ஆண்டு முதலே அரசாங்கங்கள் விரிவுபட்ட தேசியமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாலும் இந்த சட்டம் முக்கியமானது என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, கடந்த வருடம் ஷெல் பெற்றோலியம் நிறுவனத்தின் இலங்கைப் பிரிவை மீண்டும் அரசுடமையாக்கியமை குறிப்பிடத்தக்கது.

# சமூக மாற்றத்திற்கேற்ப உத்வேகத்தை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி நெறிகள் அமைய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

நீதியான சமூக மாற்றத்திற்கு உத்வேகத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் பயிற்சி நெறிகள் அமைய வேண்டும் என விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி சாந்தி சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக் கழககைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாசகர் செயல் வட்டங்களின் மூலமான தகவலறிந்து தன்னை அணிதிரட்டிக் கொள்ளும் வலுவுள்ள சிவில் சமூகத்தினை பலப்படுத்தலும், வெளிப்படையான நல்லாட்சியினைக் கைக்கொள்ளும். உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தலும், சமூகப் பொறுப்புள்ள வெகுசன ஊடகங்களை ஸ்திரப்படுத்தலும், பெண்களை வலுவுணர்த்தலும், சமூக நீதியின்பால் இயங்கும் விழுமியங்களை கல்வியுடன் ஊட்டக்கூடிய ஆசிரிய சமூகத்தினை விருத்தி செய்தலும் விழுது அமைப்பின் முக்கிய ஐந்து நோக்கங்களாகின.

பயிற்சிகள் வழங்குதல், எடுத்துக் கூறலுக்கான வலையமைப்புக்களை உருவாக்கி அரசின் கொள்கைத் திட்ட மாற்றங்களுக்கு வழிகோலுதல், ஆய்வு மற்றும் வெளியீடுகள் ஆகியன எமது நடவடிக்கைகளின் தொகுப்பாகும்.

இந்தப் பின்னணியிலேயே யாழ். மாவட்டத்தில் பால்நிலைப் பயிற்சிநெறியினை நாம் நடைமுறைப்படுத்தினோம். இப்பயிற்சியினை நாம் செயற்படுத்துவதற்கு பல காரணங்கள் இருந்தன.

ஒரு விடயத்தைத் தெரிந்து அதனைப் பகுப்பாய்வு செய்து பகுப்பாய்வின் அடிப்படையில், தீர்மானத்தினை எடுத்து தகுந்த முறையில் செயற்படுத்துவது எல்லாமே இவ்வலுவுணர்ந்ததன் பயன்களாகும்.

சமூகத்தில் விரவியிருக்கும் அதிகார உறவுமுறைகளும் அவற்றிற்கேயுரிய ஏற்றத்தாழ்வுகளும் மக்கள் தம் வலுவுணர்தலைத் தடுத்து நிற்கின்றன.

ஒடுக்குமுறையில் அடங்கியிருக்கும் போது வலுவுணர்ந்து நிமிருவது எப்படி? எனவே, சமூகத்தின் அசமத்துவ உறவு முறைகளை இல்லாதொழித்தல் மக்கள் அபிவிருத்தியில் பங்கேற்பதற்கான முதன்மையான நிபந்தனையாகின்றது.

இங்குதான் பால்நிலை பற்றி நாம் பேச வேண்டியிருக்கின்றது. தமது பாலினம் குறித்து வாழ்க்கையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஆண்களும் பெண்களும் ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் சந்திக்கின்றனர். குடும்பம், சமூகம், அரசியல் என்கின்ற சகல தளங்களிலும் ஆண்களைவிட அதி கூடிய அநீதிகளுக்கு பெண்கள் முகம் கொடுக்கின்ற படிநிலையிலேயே அமைந்திருப்பதனால் பெண்கள் அனுபவிக்கும் ஒடுக்கு முறைகள் பல.

இக்கட்டமைப்பினை எமது பாரம்பரியங்களும் மத நிறுவனங்களும் ஆதரித்து நிற்கின்றன. இதனாலேதான் பால்நிலை அபிவிருத்திலான பயிற்சிகளேன் அநேக அபிவிருத்தித் திட்டங்களிலும் உட்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். பால்நிலை கருத்தியல் அடிப்படையில் புரிந்து அகப்படுத்திக்கொண்டு சமூக உறவு முறைகளை முன்னேற்றகரமாக மாற்றுவதற்கு இப்பயிற்சிகள் வழிவகுக்கின்றன.

ஒரு நீதியான சமூக மாற்றத்திற்கும் உத்வேகத்தை உருவாக்கி அதன் மூலம் சமூக மாற்றத்திற்கான புதிய யுக்திகளை அவர்கள் கண்டு பிடிக்க செய்ய வேண்டும். ஆனால், நாம் பொதுவாக இன்று பார்க்கும் பயிற்சிகளோ, வெறுமனே சில குழு வேலைகளையும் பொதுக்கலந்துரையாடல்களையும் மட்டும் உள்ளடக்கிய சம்பிரதாயபூர்வமான பயிற்சிகளாக இருக்கின்றன.

இதைக் கருத்தில் கொண்டே விழுது அமைப்பு இந்த பால்நிலையும் அபிவிருத்தி என்கின்ற கற்கை நெறியினை செயற்படுத்தியது. அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள் மத்தியிலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மத்தியிலும் பால்நிலை குறித்த விளக்கத்தினை ஏற்படுத்தி அவர்களை தமிழ் பேசும் பிரதேசங்களுக்கான பால்நிலை வளவாளர்களாகவும் பயிற்சியாளர்களாகவும் மாற்றுவதே எங்கள் நோக்கம். இப்பயிற்சியின் பாடவிதானத்தையும் அதற்குப் பொருத்தமான முறையில் தான் அமைத்துள்ளோம்.

இப்பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு செயற்றிட்டத்தில் அவர்கள் ஈடுபட வேண்டும் என்பது எமது முன் நிபந்தனையாயிற்று. ஒவ்வொரு பயிலுனரும் தமக்கேற்ற முறையில் தாம் ஏற்கனவே பணி செய்யும் புலத்தில் பயிற்சியின் காலகட்டத்திற்குள் ஓரளவுக்கு பூர்த்தி செய்யப்படக்கூடிய ஒரு சிறிய கருத் திட்டத்தினை தெரிவு செய்து செயற்படுத்தினர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## விண்ணப்பங்கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் மூகாமைத்துவப்பட்டக் கற்கை நெறிக்கான (Bachelor of Management Studies) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும் திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு அடிப்படைக் கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இக் கற்கை நெறி நான்கு வருட காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இந்நெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும். விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (4)

## கண்காட்சியும் மலிவு விற்பனையும்

ஓல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இக்கண்காட்சியில் தரம் ஒன்று முதல் பல்கலைக்கழகம் வரையான மாணவர்களுக்கான பாட மற்றும் பயிற்சி நூல்கள் ஆங்கில மற்றும் தமிழ் நாவல்கள், மருத்துவ நூல்கள், ஆய்வுகூட உபகரணங்கள், பாடசாலை உள்ளீட்டுப் பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கலை தொடர்பான வாத்தியக்கருவிகள் அனைத்தும் விற்பனை செய்யப்படவுள்ளன. (4)

## சிறுவர் காப்பகத்திற்கு நிதி சேகரிக்க நடைபயணம் மேற்கொள்ளும் ஈழத்தமிழர்

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பிரித்தானியாவில் புகலிடம் பெற்ற அகதி ஒருவர் பேர்மிங்ஹாமில் இருந்து லண்டன் வரை நடைபயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

தனது தாய்நாட்டில் உள்ள தாய், தந்தையற்ற சிறுவர் விடுதி ஒன்றுக்கும் பிரித்தானியப் போர் வீரர்களுக்கும் உதவி செய்வதே இவரது நடைபயணத்தின் நோக்கமாகும்.

46 வயதுடைய ஜொகன்னஸ் சண்முகம் என்ற இவர் நன்கு நெடுந்தூர மரதன் ஓட்டங்களுக்குச் சமனான தூரத்துக்கு ஆறு நாட்கள் நடைபயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பிரித்தானிய படைகளின் தொண்டு நிறுவனம் ஒன்றுக்கும் செரண்டிப் சிறுவர் காப்பகத்திற்கும் வழங்குவதற்காக 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ் நிதியை சேகரிக்கும் நோக்குட்னேயே இவர் இந்த நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

தமிழனாக இருந்தால் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது எனது வாழ்வு ஆபத்தைச் சந்தித்தது என அவர் தெரிவித்தார்.

எனது வாழ்வில் நான்கு தடவைகள் உயிர் தப்பியுள்ளேன். ஆளும் அரசாங்கத்தின் மொழியான சிங்களத்தில் பேசத் தெரிந்ததாலேயே நான் அவ்வாறு உயிர் தப்ப முடிந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்திலிருந்து பெரும்பாலான தமிழர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சரணாலயமாக பிரித்தானியா எமக்கு உதவியுள்ளது. நாங்கள் யுத்தத்தின் கோரத்தை நேரடியாக அனுபவித்தவர்கள். தற்போது பிரித்தானியாவில் நாம் தங்கியுள்ளோம். நாங்கள் பிரித்தானியப் படைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

அதேவேளை, இலங்கையில் தற்போதும் துன்பங்களை அனுபவிக்கும் தாய், தந்தையற்ற சிறுவர்களுக்கும் உதவ வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-2)

## ஒளிவிழா

(பொலிகண்டி)

யா/ பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் ஒளிவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சக்கோட்டை பங்குத்தந்தை வண. பிதா அகஸ்ரீன் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி. இ.குட்டித்தம்பியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வின் போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (அ-48)

## மக்களை பிழையாக வழிநடத்தும் அரசியல் கட்சிகளை அரசாங்கம் சுவீகரிக்க வேண்டும்

### அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலக நாடுகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்லும் அரசியல் கட்சிகளை அரசாங்கம் சுவீகரிக்க வேண்டுமென பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு கோள் சொல்லும் தோல்வியடைந்த அரசியல் கட்சிகள் குறித்து விசாரணை நடத்தி அவற்றை தடை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வினைத்திறனற்ற நிறுவனங்களை தேசியமயப்படுத்தும் அரசாங்கத்தின் உத்தேச யோசனைக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு தோல்வியடைந்த அரசியல் கட்சிகளை சுவீகரிக்கும் அதிகாரத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியினர் கீழ் எந்தவொரு நிறுவனமும் நட்டமடைய முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார். பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் வர்த்தக நிறுவனங்களின் தரத்தை உயர்த்த வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து மக்கள் போதியளவு விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளனர். (4-2)

முதன்முறையாக யாழ். மண்ணில்

NEW ANU BEAUTY CLINIC

இன் மாபெரும் வருட இறுதி ஒருநாள் அழகுக் கலை பயிற்சி கருத்தரங்கு

அறிமுகப் பயிற்சி கருத்தரங்கு

காலம்:- 06.11.2011 9 am முதல்

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

மணப்பெண் முகத்தில் முடிவளர்தல், முகப்பரு, பரு அடையாளம் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்குமான ஆலோசனை அன்றைய தினம் வழங்கப்படவுள்ளது.

(முன்பதிவுகளை மேற்கொள்ளவும்)

இறுதிப் பயிற்சி கருத்தரங்கு

காலம்:- 13.11.2011 காலை 9 மணி முதல்

இடம்: வீரசிங்கம் மண்டபம்.

ஆரம்ப வழுக்கை நீக்கல், Gold Facial தோலின் தன்மை அறிதல், Nailart முகப்பரு, பொடுகு, கண் கருவளைய சிகிச்சைகள், Galvanic, Ultrasonic, High Frequency தொழில் நுட்பங்கள் மற்றும் மணப் பெண்ணுக்குரிய ஒப்பனை

(தமிழ் மொழி மூலமான பயிற்சிகள்)

அழகுக்கலை நிபுணர்

திருமதி அனு குமரேசன்

Ad.Dip. in B.T.H.D (Cosmetalogist (India)

City & Gills (UK) Arts & Crafts (India), Member of S.L.A.H.A.B.

ஆர்வமுள்ளவர்கள் முன்பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

T.P:-077 2099546, 0777408443, 011 5752618

(அ-4910)

# உலகத்தமிழர் பேரமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ள சீமானுக்கு தடை விதிப்பு

## விமான நிலையத்திலிருந்தே திருப்பப்பட்டார்



அமெரிக்காவில் நடைபெறும் உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ள சீமானுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து நாம் தமிழர் கட்சி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, உலகத் தமிழர் பேரமைப்பு உள்ளிட்ட பல்வேறு தமிழர் அமைப்புகள் அமெரிக்காவில் தங்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு சீமானுக்கு அழைப்பு விடுத்திருந்தன. அதற்கான முறையான பயண அனுமதியும் அந் நாட்டு அரசிடமிருந்து பெற்று சீமானின் பயண ஏற்பாடுகளை உறுதி செய்தனர்.

இதனையடுத்து கடந்த 4 ஆம் திகதி இரவு சென்னையில் இருந்து அமெரிக்காவுக்கு சீமான் புறப்பட்டுச் சென்று நேற்று அதிகாலை சீமான் நியூயோர்க் சென்று சேர்ந்த போது அவரை நாட்டிற்குள் அனுமதிக்க முடியாது என்று கூறி விமான நிலையத்திலேயே தடுத்து வைத்துள்ளனர்.

இதற்கான காரணம் கேட்டதற்கு சீமான் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நெருக்கமானவர் என்றும் அவரை அனுமதித்தால் அது அமெரிக்க நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஆகலாம் என்ற அச்சம் காரணமாக அனுமதி மறுக்கப்படுவதாக கூறியுள்ளனர்.

சீமானுக்கு பயண அனுமதி வழங்கப்பட்ட போது இந்த உண்மைகள் அவர்களுக்கு தெரியாமல் போனது ஏன்? இதிலிருந்து தமிழினத்தின் நலனுக்கு எதிரான சக்திகள் அளித்த தகவல்களின் பேரிலேயே சீமானுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

இது அமெரிக்காவில் நடைமுறையில் உள்ள மனித உரிமை கருத்துச் சுதந்திர சட்ட உரிமைகளுக்கு முரணான நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையை நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. ஈழத்தமிழர்களின் விடுதலைக்காக உண்மையாகப் போராடிவரும் அனைத்து தமிழர் தலைவர்களும் இப்படிப்பட்ட சட்ட அராஜகங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

உலகத்தமிழர் பேரமைப்பின் தலைவராக உள்ள அருட் தந்தை இம்மானுவேல் அடிகளாரை இதேபோல் தான் சென்னை விமான நிலையத்தில் இந்திய குடியேற்றத்துறை விமானத்தில் வைத்து இறக்கவிடாமல் திருப்பி அனுப்பியது. அதுதான் இன்றைக்கு சீமானுக்கு நடந்துள்ளது.

இன்றைக்கு சீமானுக்கு இழைக்கப்பட்ட அநீதி தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் தமிழினத்தின் அரசியல் போராட்டம் ஒரு போதும் முடங்கி விடாது என அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

## பாகிஸ்தானின் முடிவு வரவேற்கத்தக்கது

மிகவும் வேண்டப்பட்ட நாட்டிற்கான அந்தஸ்தை இந்தியாவுக்கு வழங்க பாகிஸ்தான் முன்வந்துள்ளதை வரவேற்கிறேன் என பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ்நாட்டின் கேன்ஸ் நகரில் நடக்கும் ஜி20 மாநாட்டில் பங்கேற்கச் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அங்கு நிருபர்களிடம் கூறியதாவது, தெற்காசியப் பிராந்தியத்தின் வளர்ச்சியில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு சம அளவிலான பங்கு உண்டு. இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக நலன்களை மேம்படுத்தும் விதமாக மிகவும் வேண்டப்பட்ட நட்பு நாடு என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு வழங்குவதாக பாக். அமைச்சரவை முடிவு செய்துள்ளதை வரவேற்கிறேன். இது ஒரு புதிய மாற்றத்திற்கான திறவுகோல். எனினும் இது மிகவும் காலதாமதமான முடிவு. ஏனெனில் 17 ஆண்டுகளுக்க முன்பே இத்தகைய அந்தஸ்தை அந்த நாட்டுக்கு இந்தியா வழங்கிவிட்டது. (அ-2)

# மும்பை சம்பவம் குறித்து விசாரிக்க பாக்.நீதிபதிகள் குழு இந்தியாவுக்கு

மும்பை சம்பவம் குறித்து தொடர் விசாரணை நடத்துவதற்காக பாக். நீதிபதிகள் குழு விரைவில் இந்தியா வரவுள்ளது.

கடந்த 2008 ஆம் அண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மும்பையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து தொடர் விசாரணை நடத்துவதற்காக பாக். நீதிபதிகள் குழுவினர் இந்தியா வர திட்டமிட்டுள்ளனர்.

இத்தகவலை இந்தியாவுக்கான பாக். ஹைகமிஷனர் ஷாகித் மாலிக் தெரிவித்துள்ளார். இது குறித்கு மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை சந்தித்து கூறியுள்ள தாகவும் மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதியளிக்கும் திகதியில் பாக். நீதிபதி குழுவினர் வரகை தரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது மும்பை சம்பவத்தை விசாரணை நடத்தி வரும் மும்பை மெட்ரொபாலிட்டன் தலைமை மாஜிஸ்திரேட் ஆர்.வி. சவந்த் வாக்லெ மற்றும் விசாரணை அதிகாரி ரஷேமஹாலே ஆகியோரை சந்தித்து இவ் வழக்கில் சம்பந்தமான விபரங்கள் குறித்து பேசலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# பாரதச் செய்திகள்

## வழக்கை தள்ளுபடி செய்யக் கோரிய ஜெயலலிதாவின் மனு நிராகரிப்பு



(புதுடில்லி)

பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் மீண்டும் ஆஜர் ஆவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி முதல்வர் ஜெயயலலிதா தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.அப்படி விலக்கு அளிப்பது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடுமென நீதிபதிகள் தெரிவித்துவிட்டனர்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது. இந்த வழக்கில் கடந்த மாதம் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் ஜெயலலிதா ஆஜரானார். அப்போது ஜெயலலிதாவிடம் 567 கேள்விகள் கேட்கப்பட்டன. இன்னமும் கேள்விகள் கேட்க வேண்டி உள்ளதால் நாளை மறுதினம் சிறப்பு நீதிமன்றில் மீண்டும் ஆஜராக வேண்டுமென சிறப்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றில் ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்தார்.

அதில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் ஏற்கனவே இருமுறை ஆஜராகி உள்ளதால் மீண்டும் ஆஜராக வேண்டுமென கட்டாயப்படுத்த முடியாது. எனவே, சிறப்பு நீதிமன்றில் ஆஜராவதில் இருந்து தனக்கு விலக்கு அளிக்கவேண்டுமென கோரியிருந்தார்.

இந்த மனு உச்சநீதிமன்றின் மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் முன் விசாரணைக்கு வந்தது.

அவ்வேளையில் ஜெயலலிதா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் ஜெயலலிதா மீண்டும் நேரில் ஆஜராக வேண்டிய அவசியம் இல்லை. அவர் தன் வாக்கு மூலத்தை எழுத்து மூலமாக சமர்ப்பிக்கலாம் என்றார்.

இந்த வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு விபரம் வருமாறு, தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. அதேநேரத்தில் ஜெயலலிதாவின் வாக்குமூலத்தை பதிவு செய்வதை ஓரிரு நாட்களில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் முடிக்கலாம். முடிந்தால் ஜெயலலிதா ஆஜராக வேண்டிய திகதியை வேறு திகதிக்கு மாற்றலாம். புதிதாக ஒரு திகதியை நிர்ணயித்து அந்த திகதியில் ஆஜராகும்படி ஜெயலலிதாவுக்கு உத்தரவிடலாம் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். (அ-2)

# மன்மோகனின் வார்த்தைக்கு நாட்டில் மதிப்பே இல்லை

## அத்வானி தெரிவிப்பு

(புனே)

ஜனநாயத்தை பொறுத்தவரை பிரதமரின் வார்த்தைதான் இறுதியானதாக இருக்க வேண்டும். பிரதமர் மன்மோகன்சிங் அப்படித்தான் செயற்படுவார் என நினைத்தேன். ஆனால், அவர் அப்படிச் செயற்படவில்லை. அவரின் வார்த்தைக்கு இங்கு மதிப்பே இல்லை என பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி கூறினார்.

ஊழலுக்கு எதிராக நாடு முழுவதும் இரத யாத்திரை மேற்கொண்டுள்ள பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி நேற்று முன்தினம் மஹாராஸ்டிரா மாநிலம் புனேவுக்கு வந்தார்.

அங்கு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, சுவிட்சர்லாந்திலுள்ள வங்கிகளில் கறுப்புப்பணத்தை பதுக்கி வைத்துள்ள இந்தியர்களின் பெயர் பட்டியலை பிரான்ஸ் அரசு சமீபத்தில் இந்திய அரசிடம் அளித்தது. ஆனால், இந்தப்பட்டியலை வெளியிடுவதற்கு மத்திய அரசு மறுத்து வருகிறது. இதன் மூலம் கறுப்புப்பண விவகாரத்தில் தீவிரமாக செயற்படுவதை அரசு விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது. கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்துள்ளவர்[illegible]ன் பெயர்களை வெளியிடுவதில் என்ன தயக்[illegible]. இந்த விவகாரத்தை பாராளுமன்ற குளிர்கா[illegible] கூட்டத்தொடரில் எழுப்புவோம். இந்தியாவும் சுவிட்சர்லாந்தும் வரி விதிப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் அடுத்தாண்டு ஏப்ரலில் தான் அமுலுக்கு வரும்.

கறுப்புப்பணத்தை பதுக்கி வைத்துள்ளவர்கள் அவற்றை வேறொரு வங்கிக்கணக்கிற்கு மாற்றி விடுவதற்கு அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதா? இந்த விவகாரத்தில் அரசின் நடவ்டிக்கை சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. ஆளும் கட்சி வாரிசு அரசியலை ஏற்றுக்கொண்டு விட்டது. நமக்கு இது அதிர்ச்சியாக இல்லாவிட்டாலும் உலகளவில் இது விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது.

ஜனநாயகத்தை பொறுத்தவரை பிரதமரின் வார்த்தைதான் இறுதியானதாக இருக்க வேண்டும். மன்மோகன்சிங் அப்படித்தான் செயற்படுவார் என நினைத்தேன். ஆனால், அது நடக்கவில்லை. அவரின் வார்த்தைக்கு இங்கு மதிப்பேயில்லை. நான் இறப்பதற்குள் இராகுலை பிரதமராகப் பார்த்துவிட வேண்டுமென காங்.பொதுச்செயலர் திக்.விஜய்சிங் கூறியுள்ளார். இதற்கு சிரிப்பைத்தான் பதிலாகக் கூறமுடியுமே தவிர வேறு எதையும் கூறமுடியாது என அத்வானி கூறி[illegible]ார். (அ-2)



பிரான்சின் கேன்ஸ் நகரில் இடம்பெற்ற ஜி20 மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் திட்டக் குழுத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியாவைச் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

யானையைக் கொன்று கைச்சுளகால் மூடி மறைக்கலாமோ? - தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இயற்கை ஒரு நாள் தீர்ப்பு வழங்கும்

வன்னியில் நடந்த போர்க் கொடூரங்களை மறைப்பதில் இலங்கை அரசு அதிதீவிரம் காட்டி வருவது வெளிப்படை.

போர்க் குற்ற விசாரணை முன்னெடுக்கப் பட்டால், அது அரசிற்கு பேராபத்தாக அமையும் என்பதால் வன்னிப் போர்க் கொடூரங்களை மூடி மறைத்துவிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரச தரப்பு முயற்சிகள் முடுக்கி விடப் பட்டுள்ளன.

எனினும் நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும், ஊடகங்களின் புலனாய்வுத் திறனும் வன்னியில் நடந்த மகா பாவச் செயலை ஆவணப் படமாக்கி உலகம் எங்கும் உள்ள மனித இதயங்களை பிழிய வைக்கின்றது.

இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மனித இனம் பட்ட அவலம் தொடர்பாக மாநாடு கூட்டப்பட்டால், அதில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த கொடூரங்களை வெளிப் படுத்தும் காணொளி காட்சிப்படுத்தப்பட்டு இப் படியெல்லாம் மோசமான மனிதவதை இலங் கையில் நடந்தது என்று கூறப்படும்.

அப்போது இலங்கையில் ஆட்சி மாற்றங்கள், உரிமை மாற்றங்கள் கூட நடந்திருக்கலாம். நடந்த மோசங்களை நினைவுபடுத்தும்போது செய்தவர்கள் படும் துன்பம் ஆழமாக இருக்கும் என்பதை இவ்விடத்தில் குறிப்பிடும் அதேவேளை,

போர்க் குற்றத்தை மறைக்க முயற்சிக்கும் அரசு இனப்பிரச்சினையை மறந்து விடுவது மகா துன்பமானது.

சர்வதேச சமூகத்திடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக போர்க் குற்றத்தை மறைப் பதற்கு இலங்கை அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து அதில் வெற்றியும் காணலாம்.

ஆனால் போரினால் புண்பட்ட, கண்ணீர் விட்ட தமிழ் இனம் அதை ஒருபோதும் மறந்து விட மாட்டாது.

உண்மையில் இலங்கை அரசு நேர்மையாக நடப்பதாக இருந்தால், வன்னிப் போரில் நடந்த கொடூரத்திற்கு பிராயச்சித்தம் தேட, சர்வதேச நாடுகளுக்குப் பயணம் செய்வதை விடுத்து, தமிழ் மக்களை அழைத்து அவர்களின் உரிமை களை வழங்க வேண்டும்.

அப்போது போர்க் குற்றம் மட்டுமல்ல; இது வரை தமிழ் மக்களுக்கு இலங்கை ஆட்சியா ளர்களால் செய்த அத்தனை கொடூரத்தனங் களுக்கும் பாவ மன்னிப்பு வழங்கப்படும்.

இல்லை; நாங்கள் புலிகளையே அடக்கிய வர்கள். எங்களை எதுவும் செய்ய முடியாது என்ற இறுமாப்பில் அரசு சண்டித்தனம் காட்டு மாயின் என்றோ ஒருநாள் இயற்கை தீர்ப்பு வழங்கும்.

அந்தத் தீர்ப்பு வன்னிப் போரில் அரசு வென்ற வெற்றியை அர்த்தமற்றதாக்கும்.

கிடங்கு வெட்டினால் அதை வெட்டியவனே மூடுவது நல்லது. வெட்டியவன் மூடத் தவறி னால் அந்தக் கிடங்கை இயற்கை மூடும். அத ற்கு சிறிது காலம் எடுக்கலாம்.

அதற்காக கிடங்கை யாரும் மூடிவிட முடி யாது என்று எவரும் நினைக்கக் கூடாது.

அதுபோல் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசு தீர்வு காணத் தவறினால் இயற்கை தீர்வு காணும். அதற்கான காலம் நெருங்கி வருகிறது.

# இலவசக்கல்வி குறித்து 2013 இல் புதிய திட்டம்

## பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கல்வி முறைமையில் பாரிய அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தேசிய பரீட்சை முறைமைகளில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரத்தில் கற்கப் போகும் பாடப் பிரிவினை சாதாரண தரத்தில் தீர்மானிக்காது தரம் 9 இலேயே தீர்மானிக்க முடியும் என அறிவித்துள்ளார்.

இதன்படி உயர்தரத்தில் என்ன பாடப் பிரிவின் கீழ் கல்வியை தொடர போகின்றோம் என்பதனை மாணவர்கள் தரம் ஒன்பதிலேயே தீர்மானிப்பர்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு முதல் இந்தப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள் கட்டாயமாக்கப்படுவதுடன் மூன்று பாடங்கள் விருப்பத்திற்குரிய பாடங்களாக அமையும் என தெரிவித்துள்ளார்.

உயர் தரத்தில் தெரிவு செய்யப்படும் பாடப் பிரிவிற்கு அமைய இந்த விருப்பத்திற்குரிய பாடங்களை தெரிவு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய திட்டத்தின் மூலம் உயர் தரம் பயிலும் மாணவர்கள் குறித்த பாடப் பிரிவு தொடர்பில் அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பாடவிதானம் மிகவும் கடினமாக அமைந்துள்ளது எனவும் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள் உயர்தரப் பாடவிதானத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# ஸ்ரீ நாகவிகாரையின் வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண முப்படை கட்டளைத் தளபதி, முப்படையினர், பொலிஸார், சமயத் தொண்டர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் வரலாற்று பெருமை வாய்ந்த ஸ்ரீ நாகவிகாரை வருடாந்த உற்சவம் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் ஸ்ரீநாகவிகாரை பகுதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் 9ஆம் திகதி மாலை 5 மணி தொடக்கம் பூஜைகள் நடைபெற்று 6 மணிக்கு யானைகள் பங்குபற்றும் ஊர்வலம் யாழ்.நகர் முழுவதும் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு 9 மணிக்கு பின்னர் நாகவிகாரை மண்டபத்தில் தர்ம போதனைகளும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 10 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு விசேட கட்டின பூஜையும் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிக்குமார்களும் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-51)

# 25 தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு கோட்டத்தை சேர்ந்த 25 தொண்டர் ஆசிரியர்கள் எதிர்வரும் தை, மாசி மாதங்களுக்குள் நிரந்தர நியமனம் செய்யப்படுவார்கள் என நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் இக்கூட்டத்தில் 10 வருடங்கள் தாம் தொண்டர் ஆசிரியர்களாக பணி புரிந்ததாக அமைச்சருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(அ-3-10)

# ஏழாம் அறிவு பெற விவிலியப் பார்வையில் நாம் முன்மதி உடையோராய் இருப்போம் (மத்25:1-13)

இன்றைய நற்செய்தியானது நாம் எண்ணெயில்லா விளக்கேந்திய அறிவிலிகளா? அல்லது எண்ணெயொடு இணையாவிளக்கேந்திய விவேகிகளா? என ஆய்வு செய்ய நம்மை அழைக்கின்றது. இறையாட்சிகக்கு உட்படுவோர், இயேசுவை பின்பற்றுவோர், முன்மதி உடையோராய் விளங்க வேண்டும் என்பதற்காகவே பத்து கன்னியர்களின் உவமையை இயேசு சொல்லி முன்மதி பற்றி விளக்குகிறார். இயேசு முன்மதி இறையாட்சியின் ஒரு மதிப்பீடு என்கின்றார்.

## பரமபிதா காட்டிய பாதை

இதனை நாம் இன்று ஏழாம் அறிவு என்றும் கூறலாம்.

இதுதான் இறையறி, இறைமதி என்பதாகும். இந்த இறையறிவைக் கொண்டிராதோர் அறிவிலிகள் என்றும் கொண்டிருந்தோர் முன்மதி உடையவர்கள் என்றும் நற்செய்தியில் இன்று அறிகின்றோம்.

முன்மதி என்பது விழிப்புணர்வு, அறிவாற்றல், ஞானம், எதிர்காலத்தைப் பற்றி சிந்தனை, திட்டமிடுதல் போன்றவற்றின் கலவையே எனலாம். இறைமதி கொண்டோர் சிந்தனையில் கூர்மையையும் செயலில் நேர்மையையும் சொல்லில் ஓர்மையையும் கொண்டுள்ளனர்.


எனவே இறைமதியை வளர்த்துக் கொள்ள இறைமை உணர்வில் வளர்வது காலத்தின் கட்டாயமாகத் தேவையாகின்றது. இயேசு நம் வாழ்க்கை எப்பொழுதும் குதூகலமாக, மங்களகரமாக இருக்க வேண்டும். ஒரு திருமண வீடாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

அதற்கு முன்மதியோடு செயற்பட வேண்டும். எண்ணெய் இல்லாமல் கடைகடையாக, தெருத்தெருவாக, வீடுவீடாக அலைந்தால் மணமகனோடு இருக்கும் வாய்ப்பு இழந்து அந்த மகிழ்ச்சியை அனுபவிக்காமல் போய்விடுவோம். விளக்கு பிறருக்கு உதவ எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். விளக்கு எரிய எண்ணெய் தன்னை இழந்தும் எரியும் திரி வெந்தழலில் வேகியும் வெளிச்சம் கொடுக்கின்றது.

நாமும் அவ்வாறாக வேண்டும். அப்போது அது எமக்கு ஒரு திருமண வீட்டு அனுபவம் தான். விழிப்பாக நாம் இருக்க வேண்டும். எதிரியும் எதிர்ப்பும் குறைத்து மதிப்பிடக்கூடியவை அல்ல.

அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை, யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித் திரிகின்றது. (1 பேதுரு 5:8) எரியும் விளக்கு தயார் நிலையின் அடையாளமாகும்.

போதிய எண்ணெய் இல்லாமல் தங்கள் விளக்குகளை ஏற்ற ஆயத்தமற்றவர்களாய் திருமண கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் பிந்தி வந்தவர்கள் ஏமாற்றத்தோடு வெளியே நிற்கின்றார்கள். ஆயத்தமாயிருந்தவர்கள் மட்டுமே திருமண மண்டபத்துக்குள் சென்று கொண்டாட்டத்தில் கலந்து கொள்கின்றார்கள். இந்த உவமை வழியாக இயேசு இரு கருத்துக்களை உணர்த்துகின்றார். முதலில் விளக்கு என்பது நாம் செய்கின்ற நற் செயல்களைக் குறிக்கின்றது.



உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் புகழ்வார்கள். (மத்5:16) என இயேசு கூறுகின்றார்.

மேலும் யார் அறிவாளி யார் அறிவிலி என்பதை இயேசு ஏற்கனவே விளக்கியிருந்தார். அதாவது முன்மதியோடு உறுதியான அடித்தளம் இட்டு வீடுகட்டுபவர் அறிவாளி. ஆனால் உறுதியற்ற மணல் மீது வீடு கட்டுபவர் அறிவிலி (மத் 7:24-27). இன்று நமது வாழ்வையும் கொஞ்சம் ஆய்வு செய்து இறையாட்சிப் பார்வையில் நாம்முன்மதியுடையோராய் இருக்கின்றோம் என்றால்... இல்லை பதிலாகலாம். அணையா விளக்கை எம் கையில் ஏந்துவோம். முன்மதி உடையோராய் இந்த உலகின் பார்வையில் மட்டுமல்ல இறையாட்சிப் பார்வையிலும் நாம் வாழ தயாராதல் நம் வாழ்க்கை ஒளிர்கின்ற விளக்காகத் துலங்கிட வாழ்வே கொண்டாட்டம் தான்.

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

# தலிபான், அல்கொய்தா தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா தாக்குதல்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்குள் பதுங்கி இருக்கும் தலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளை அழிப்பதற்காக அமெரிக்க இராணுவத்தினர் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஒபாமா பதவியேற்ற பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் ஆயிரத்து 500 தீவிரவாதிகளும் முக்கிய தீவிரவாத தளபதிகளும் கொல்லப்பட்டனர்.


ஆனால் அமெரிக்காவின் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மேலும் தூதரக ரீதியான உறவிலும் சிக்கல் ஏற்பட்டது.

எனவே ஏவுகணைத் தாக்குதலில் பல்வேறு கட்டுப்பாடுகளை மேற்கொள்ள அமெரிக்கா ஒப்புக் கொண்டது.

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. அமெரிக்க இராணுவம் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை ஆகியவை இணைந்து விதிகளை கடுமையாக்க சம்மதித்துள்ளன. இதன்படி குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே அமெரிக்காவால் ஏவுகணை தாக்குதல் நடத்த முடியும்.

(அ-2)

# ஏ.ரி.எம்.ஆல் வந்தது பணமும் பாம்பும்



ஏ.ரி.எம்.இல் என்ன வரும்? பணம் வரும் இல்லாவிட்டால் பணம் இல்லை ஸ்பெயினில் உள்ள ஏ.ரி.எம். இயந்திரத்தில் இருந்து பாம்பு வந்திருக்கிறது. ஸ்பெயினின் பாஸ்க் பகுதியில் உள்ளது லாடியோ நகரத்திலுள்ள கஜா மாட்ரிட் வங்கி .ஏ.ரி.எம்-க்கு ஒருவர் பணம் எடுக்க வந்தார். காட்டை நுழைத்து பாஸ்வேர்டு அடித்து பணத்தொகையை டைப் செய்தார். பணம் வரும் வழியில் தயாராக கையை வைத்திருந்தார். கரன்சி நோட்டுகளுடன் கூடவே வழுவழுவென்று ஏதோ தென்பட்டது. சுதாரித்த அவர் நோட்டுகளை சட்டென்று இழுத்துவிட்டார்.

பாம்பு ஒன்று புஸ் புஸ் என்று சத்தம் போட்டபடியே மெதுவாக வெளியே தலையை நீட்டியது இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அவர் உடனே பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். ஏ.ரி.எம்.இயந்திரத்தில் பணத்தை எண்ணி வெளியே தள்ளும் பகுதியில் பாம்பு சிக்கியிருந்ததும் கரன்சிகளுடன் சேர்ந்து வெளியே வந்ததும் தெரியவந்தது.

(அ-2)

# கறுப்புப்பணம் வெளிவர உறுதியான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்

## ஜி-20 நாடுகள் மாநாட்டில் தீர்மானம்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் கேன்ஸ் நகரில் நடைபெற்ற ஜி-20 நாடுகள் மாநாட்டில் கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவர உறுதியான சட்டங்கள் இயற்றப்படட வேண்டும் என்று நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டது.

வருமானவரி ஏய்ப்பு செய்து கறுப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருப்பவர்கள் பற்றி தகவல்களைப் பிற நாடுகளுடன் பரிமாறிக் கொள்ளும் விதமாக சட்டத்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று இரண்டு நாட்கள் சர்வதேச மாநாட்டின் முடிவில் தீர்மானங்கள் நிறைவேறின.

வங்கிகள் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட்ட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோசியும் வலியுறுத்தினர்.

பயங்கரவாதச் செயல்களுக்கு நிதி, கறுப்புப் பணம் பதுக்கல் இவற்றுக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானங்களை வரவேற்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

(அ-2)



பிரான்சின் கேன்ஸ் நகரில் நடந்த ஜி-20 மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் ஆஜென்டீனா ஜனாதிபதி கிறிஸ்டினா கிர்ச்னர் சந்தித்து பேசிக் கொண்டதை படத்தில் காணலாம்.

# மேற்கத்தேய நாடுகளின் கண்டுபிடிப்புக்களே மாணவர்கள் வெளிநாடு செல்வதற்கு காரணம்

ஒரு மாணவர் வெளிநாட்டிற்கு சென்று பொறியியல் படிப்பை மேற்கொள்ள நினைப்பதற்கு பலவித காரணங்கள் உள்ளன. பொதுவாக முன்னேறிய மேற்கத்தேய நாடுகள் குறிப்பிட்ட துறையில் ஏற்பட்டிருக்கும் புதிய கண்டுபிடிப்புகளை கல்வியில் அறிமுகப் படுத்துவதுடன் விரிவான ஆராய்ச்சி வாய்ப்புகளையும் வழங்குகின்றன.

சமீபகாலத்தில் ஆசிய நாடுகளை ஹெங் கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு அனுபவரீதியிலான கல்வி, சர்வதேச அணுகுமுறை மற்றும் சிறப்பான வேலை வாய்ப்புகள் போன்றவற்றால் பொறியியல் படிப்புகளுக்கு இந்த நாடுகளும் பெயர் பெற்று விளங்குகின்றன.

சர்வதேச கல்வியில் முக்கியத்துவத்தை உலகளாவிய நிறுவனங்கள் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் விரும்பிய பொறியியல் கல்லூரிகள் கிடைக்காத காரணத்தால் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படிக்க பலர் விரும்புகின்றனர்.

கணக்கிலடங்காத வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இருப்பதனால் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் மாணவர்களுக்கு ஏற்படுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி, ஜப்பான் போன்ற பல நாடுகளில் எங்கே செல்வது என்ற குழப்பம் ஏற்படும் பல சர்வதேச கல்வி நிறுவனங்கள், நீண்டகால திட்டங்கள், வேலைவாய்ப்புகள், கற்பித்தல் மொழிகள், அணுகல்வசதிகள், செலவீனங்கள் போன்ற பல விடயங்களை கவனத்தில் கொண்டே ஒரு மாணவர் வெளிநாட்டு கல்வித் தொடர்பான முடிவை எடுக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு வெளிநாட்டு பல்கலையும் தனக்கென தனித்தனி சேர்க்கை விதிமுறைகளைக் கொண்டிருந்தாலும் சில விதிமுறைகள் அனைத்திற்கும் பொதுவானவையாக உள்ளன. இந்தப் பொதுவான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ-2)




# பதினைந்து பேரில் ஒருவர் ஏழை; அமெரிக்க கணக்கெடுப்பில் தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வசிக்கும் மக்களில் பதினைந்து பேரில் ஒருவர் ஏழையாக உள்ளதாக சமீபத்திய கணக்கெடுப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து கணக்கெடுப்பில் தெரிவித்திருப்பதாவது,

கடந்த 2010 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி ஆண்டு ஒன்றிற்கு நான்கு பேர் உள்ள குடும்பத்தினரின் ஆண்டு வருமானம் 11 ஆயிரத்து 157 டொலராகவும் தனிநபரின் ஆண்டு வருமானம் ஐந்தாயிரத்து 570 டொலருக்கு கீழே உள்ளவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாக கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சுமார் 20.5 மில்லியன் அமெரிக்க மக்கள் அதாவது அமெரிக்க மக்கள் தொகையில் 6.7 வீதத்தினர் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளதாகவும் 50 சத வீதம் பேர் வறுமை கோட்டின் கீழ் வசிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 40 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களை கொண்டதாக விளங்கும் கொலம்பியா மாகாணத்தில் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இங்கு 10.7 சதவீதத்தினர் வறுமையில் வாடுவதாகவும் ஏனைய மாகாணங்களான மிசிசிப்பி, நியூமெக்சிகோ, நிவேதா ஆகியவற்றில் 4.6 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டிற்கு பின்னர் தான் அமெரிக்காவில் வேலைவாய்ப்பின்மை என்பது அதிகரித்து வந்துள்ளது என்றும் தொழிற்துறை நகரங்களான டெட்ராய்டு, கிராண்ட ரேபிட், ஓகியோ ஆகிய இடங்களில் வறுமை நிலை தொடர்ந்து நீடித்து வருகின்றது.

கடந்த இரண்டாயிரம் ஆண்டிற்கு பின்னர் மட்டும் ஏழைகளின் எண்ணிக்கை 41 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

(அ-2)

# அண்டார்ட்டிக்கா பகுதியில் இராட்சத பனிப்பாறை



(அண்டார்டிக்கா)

பனிப்பிரதேசமான அண்டார்டிக்காவில் இராட்சத பனிப்பாறை ஒன்று உருவாகி வருகின்றது. பைன் தீவு அருகே 880 சதுர கிலோ மீற்றர் சுற்று அளவுக்கு இது பரவி உள்ளது.

இந்தப் பனிப்பாறை இந்த ஆண்டு இறுதியிலோ அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்திலோ முழுமையாக வளர்ச்சி அடையும்.

இந்தத் தகவலை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த இராட்சத பனிப்பாறை முழுமையாக வளர்ச்சி அடையும் பட்சத்தில் அது ஜேர்மனி தலைநகரம் பேர்லின் அளவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ-2)

# யூனிஸ் கான் சதம்; பாகிஸ்தான் கௌரவம்



(சார்ஜா)

யூனிஸ்கானின் சிறப்பான சதத்தின் மூலம் பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 282 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிபடைய, இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3 ஆம் திகதி சார்ஜாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 413 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குமார் சங்கக்கார 144 ஓட்டங்களையும் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் 92 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன, சில்வா தலா 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சயிட் அஜ்மல் 4 விக்கெட்டுக்களையும் உமர் குல் 3 விக்கெட்டுக்களையும் ஜீனைட்ட் கான் 2 விக்கெட்டுக்களையும் றீமன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் 2விக்கெட்டுக்களையிழந்து 35 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு அசார் அலி - யூனிஸ்கான் ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் யூனிஸ் கான் 108 பந்துகளிலும் அசார் அலி 150 பந்துகளிலும் அரைச்சதம் கடந்தனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்தபோது அசார் அலி 53 ஓட்டங்களுடன் குலசேகரவின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நான்காவது விக்கெட்டுக்காக யூனிஸ் கானுடன் இணைந்த அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்

இதில் யூனிஸ் கான் 188 பந்துகளில் தனது 18ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய பாகிஸ்தான் அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது யூனிஸ் கான் 211 பந்துகளில் (12 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 122 ஓட்டங்களை எடுத்து வெலகெதரவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அசாத் சபீக் 16, அட்னன் அக்மல் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 50 ஓட்டங்களுடனும் அப்துர் றீமன் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் வெலகெதர 3 விக்கெட்டுக்களையும் ஹேரத் 2 விக்கெட்டுக்களையும் குலசேகர ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 131 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது.

# ஸ்வோனரேவா விலகல்



பெட் கிண்ண டென்னிஸ் போட்டியின் இறுதி போட்டியில் இருந்து ரஷ்ய வீராங்கனை வேரா ஸ்வோன்ரேவா காயம் காரணமாக விலகியுள்ளார்.

அவருக்கு பதிலாக இரட்டையர் பிரிவில் விளையாடி வரும் மற்றொரு ரஷ்ய வீராங்கனையான எலினா வெஸ்னினா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேரா ஸ்வோனரேவா விலகியதால், ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா ரஷ்ய அணிக்கு தலைமை தாங்குகிறார்.

அனாஸ்டாஸியா பாவ்லிசென்கோவா, மரியா கிரிலென்கோ ஆகியோர் ரஷ்ய அணியில் இடம்பெற்றுள்ள மற்ற வீராங்கனைகள்.

ரஷ்ய அணி இறுதி ஆட்டத்தில் செக். குடியரசை சந்திக்கிறது. அந்த அணிக்கு பெட்ரா விட்டோவா தலைமை தாங்குகிறார். லூச்சி சபரோவா, லூச்சி ரடேகா, வீட்டா பெஸ்கே ஆகியோரும் அந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இறுதிப் போட்டி இன்று மொஸ்கோவில் நடைபெறுகிறது.

# முதலாவது டெஸ்ட் இன்று

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் இன்று ஆரம்பமாகின்றது. அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இத் தொடரில் இந்திய அணி சாதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தவிர, இந்திய அணியின்நட்சத்திர வீரர் சச்சினின், 100ஆவது சர்வதேச சதம் குறித்தும், அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.





இது குறித்து இந்திய அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளதாவது, மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரின் ஆரம்பம் சிறப்பாக அமையவேண்டியது முக்கியம். அடுத்து இத் தொடர் முழுவதும் நன்கு செயல்பட வேண்டும். இதை எப்படி செய்வதென்று திட்டமிட்டு வருகிறோம்.

இந்தடெஸ்டில், சச்சின் தமது 100வது சதத்தை அடிப்பார். அது இங்கு நடக்கும் என்று நம்புகின்றேன். இல்லை என்றால் அடுத்த போட்டியில் எடுப்பார். அவர் சாதனை சதத்தை எட்டியவுடன் சிறப்பாகக் கொண்டாடுவோம் என்றார்.





சார்ஜாவில் நடக்கும் டெஸ்ட் போட்டியைக்காண வந்த பாகிஸ்தான் இளம் ரசிகர், சூதாட்டம் இல்லாத சுத்தமான கிரிக்கெட்டை விரும்புகிறோம் என்ற வாசகம் அடங்கிய அட்டையை காண்பித்தார்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும்

## ஆஸி முன்னணி வீரர்கள் கருத்து

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத் தண்டனை மட்டும் போதாது. போட்டியில் பங்கேற்க வாழ்நாள் தடையும் விதிக்க வேண்டும் என முன்னணி வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதற்கான நடவடிக்கையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் (2010) பாகிஸ்தான் வீரர்கள், கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது. இதில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட சல்மான் பட் (30 மாதம்), முகமெட் ஆசிப் (ஒரு ஆண்டு) , முகவர் மசார் மஜீத் (32 மாதம்) ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் முகமெட் அமீருக்கு 18 வயது என்பதால் அவரது தண்டணைக் காலத்தில் (6 மாதம்) சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் இருக்க வேண்டும் என லண்டன் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் வோட்சன் கூறுகையில், இங்கிலாந்தில் பாகிஸ்தான் வீரர்கள் செய்த செயல் மிகவும் ஏமாற்றமாக உள்ளது. இந்த மூன்று வீரர்களும் கிரிக்கெட் உணர்வை குழிக்குள் தள்ளும் செயலை செய்துள்ளனர். இந்த தவறான செயலுக்கு, இவர்களுக்கு வாழ்நாள் தடையும் விதிக்க வேண்டும். மொத்தத்தில் சிறைத் தண்டனை அல்லது வாழ்நாள் தடை என்பது இவர்களுக்கு கடுமையான தண்டனை என்பதில் சந்தேகம் இல்லை என்றார்.

### இது போதாது

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ்வோ கூறுகையில், இது போன்ற தீர்ப்புகள் இதற்கு முன் கிடைத்தது இல்லை. மற்றவர்களை விட, இளம் வீரர் அமீருக்கு மிகவும் கடினமானது. சிறையில் இருக்கும் நாட்களில் இவர்கள் திருந்துவார்கள் என்று நினைக்கின்றேன். மூளையாக செயல்பட்ட சல்மான் பட்டுக்கு இன்னமும் அதிக அபராதம் விதித்திருக்க வேண்டும்.

### எச்சரிக்கை செய்தி

அவுஸ்திரேலிய வீரர்கள் சங்கத்தின் தலைவர் டிம் மே கூறுகையில்,

ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்புக்காக ஐ.சி.சி., கோடிக்கணக்கில் செலவிடுகிறது. இந்நிலையில் பாகிஸ்தானின் மூன்று வீரர்கள் சிறைத் தண்டனை பெற்றிருப்பது சோகமான சம்பவம். இந்த தீர்ப்பு திருப்தி தருகிறது. ஏனெனில், அனைத்து விளையாட்டிலும் ஊழல் செய்யும் வீரர்களுக்கு இது எச்சரிக்கை செய்தியாக அமைந்தது என்றார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் சைமண்ட்ஸ் கூறுகையில், நான் விளையாடிய போதும் ஆட்ட நிர்ணய சதி இருந்தது. இப்போது கிடைத்துள்ள தீர்ப்பு மூலம் சூதாட்டம் விலகும் என்று நம்புகிறேன். இருப்பினும் கிரிக்கெட்டை விட்டு சூதாட்டத்தை விரட்டும் வேலைகள் மெதுவாகத்தான் நடக்கின்றன என்றார்.

# பஸ்ஸ்...

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (பா-6,9)

# இளைஞன் படுகாயம்

இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்குள்ளான இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது.

குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது இடைமறித்த இரண்டு பேர் இரும்புக் கம்பியினால் சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த காரைநகரைச் சேர்ந்த கமலச்சந்திரன் (வயது 29) சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிதிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் பிரஸ்தாப நபர் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (பா-6-9)

# TILKO JAFFNA CITY HOTEL

70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive



மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம்
ரூபா 200/= மட்டுமே

யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825





# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134




# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்...

இது தொடர்பில் ஏபி தனது செய்தியில் வெளியிட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழு இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் சாட்சியங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்கான அடிப்படைவிடயங்கள் தொடர்பில் புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், பொது மக்கள் என பலதரப்பட்டவர்களின் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட போர்க் குற்றம் தொடர்பில் சுயாதீன விசாரனை கோரும் சர்வதேசநாடுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்பார்த்துள்ளன.

அத்துடன் ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்கா, கனேடிய, பிரித்தானியா, ஐக்கிய நாடுகள் சபை அதகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

எனவே இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் படுகொலை தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பதிலளிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு பதிலளிக்கப்படாவிடின் ஐ.நா. நிபுணர்குழு பரிந்துரைத்ததற்கு அமைவாக சர்வதேச விசாரணைகளுக்கான அழுத்தங்கள் அதிகரிக்கும்.

அத்துடன் ஐ.நா. சபையில் பின்புலத்துடன் இலங்கைமீது பல்வேறு தடைகள்விதிக்கப்படலாம்எனஏபிசெய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (பா)

## நல்லிணா...

சாட்சியங்களின் அடிப்படையில் இந்த இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நிலவும் இடம் தொடர்பன பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இந்த இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தக் கூடிய சமாதான சூழ்நிலை தொடர் பான யோசனைகளும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் எதிர்பார்க்கும் சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (பா-9)

## அமெ.பசுபிக் கட்ட...

ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் குழுவினர் நேற்று முன் தினம் மாலை கடற்படைத் தலைமையகத்திற்கும் சென்றிருந்தனர்.

அங்கு அவர்கள் கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் றியர் அட்மிரல் ஜெயந்த பெரேராவை சந்தித்துப் பேசியுள்ளனர்.

எனினும் அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப்பீடத்தின் முக்கிய அதிகாரியான மேஜர் ஜெனரல் கொனன்ற் இலங்கைக்கு எதற்காக பயணம் மேற்கொண்டார் என்பது பற்றிய அதிகாரபூர்வமான தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

சீனாவுடன் இணைந்து கூட்டு கடற்போர்ப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு அண்மையில் இலங்கை இணங்கியிருந்த நிலையில், அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடம் உசாரடைந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (பா-9)

## செய்தி...

என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது www.media.gov.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலோ, அல்லது வேறு எங்கிருந்தோ இலங்கை தொடர்பான செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள், இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் சட்டத்திற்கும் ஒழுங்குமுறைக்கும் அமைய செயற்பட வேண்டும் என அந்தஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுளளது. (பா-9)

## போர்க்குற்ற விசாரணை, அரசியல்...

ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசாங்கம் மீது இக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதாக ஏபி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு, போருக்குப்பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கைகள் போன்ற விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் அரசியல் ரீதியான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தத் தவறியுள்ளமை தமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக அமெரிக்க உயரதிகாரிகளிடம் கூறியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கடந்த ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இடம் பெற்ற 12 சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பால்முன்வைக்கப்பட்ட தமிழ் மக்களின் பாதுகாப்பு, நிலம், கல்வி மற்றும் கலாசாரம் குறித்த அதிகாரங்கள் தொடர்பான திட்டத்துக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்கத் தவறிவிட்டது.

அரசாங்கத்தின் இந்தக் கரிசனையற்ற போக்கினால் ஒரு முறை தாம் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக் கொண்டோம். பின்னர் கடந்த ஒக்ரோபர் மாதம் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்பியுள்ளோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கம் இவ்வாண்டின் இறுதிக்குள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காது போனால், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது குறித்து மீண்டும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கும்.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போரின் போது உண்மையில் என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் இன்னமும் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

அத்துடன், தமிழர் தாயகப்பிரதேசங்களில் படைத்தரப்பினரின் தலையீடுகள் அதிகரித்துள்ளதுடன் தமிழ் மக்களின் நிலங்களும் ஆக்கிரமிக்கப்படுவதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாக ஏபி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (பா)

# மரண அறிவித்தல்

**ஆறுமுகம் தில்லைநேசன் (ஈசன்)**
**(சிவசக்தி ரெக்ஸ்ரைல் முன்னாள் உரிமையாளர், குளியாப்பிட்டி)**



12ஆம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், குளியாப்பிட்டி மற்றும் பெரேரா லேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தில்லைநேசன் (ஈசன்) அவர்கள் 05.11.2011 சனிக்கிழமையன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (பிரபல வர்த்தகர், குளியாப்பிட்டி) மற்றும் சறோஜினி (கனடா) தம்பதியினரின் அன்பு மகனும், 02ஆம் வட்டாரம் மண்டைதீவைச் சேர்ந்த தர்மலிங்கம்-விஜயலெட்சுமி (கனடா) தம்பதியினரின் அன்பு மருமகனும், ரஜனியின் பாசமிகு கணவரும், அசோக்ரமணா, பிருத்வி (மாணவர்கள், கொழும்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் கலைநேசன் (குளியாப்பிட்டி), கோபாலகிருஷ்ணன் (கனடா), இராதாகிருஷ்ணன் (கனடா), விஜயலட்சுமி (கொழும்பு), சிவநேசன் (குளியாப்பிட்டி), நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரமேசன் (ஜேர்மனி), சபேசன் (கனடா), மகேசன் (ஜேர்மனி), ரமணி (கனடா), மகாலிங்கம், நளினி, அருள்மொழி, றோகினி, விக்னேஸ்வரன், கிரிதரன், தரணி ஆகியோரின் மைத்துனரும், சிவகுமார் (கனடா), மஞ்சுளாநிதி (கனடா) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.11.2011 திங்கட்கிழமை இல.63, பெரேரா லேன், வெள்ளவத்தையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெகிவளை கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரேரா லேன், வெள்ளவத்தை,
கொழும்பு-06
(சி-4916)
தகவல் :
குடும்பத்தினர்


# SPOKEN ENGLISH
## WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர்கள், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள், விற்பனை பிரதிநிதிகள் கலந்துகொள்ளும்

**இலவச ஆங்கில வகுப்பு**

அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
10.11.2011 வியாழன் (போயா விடுமுறை தினம்)
பிரிவுகள் : (ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
காலை 8-9.30, 9.30-11, 11-12.30 மாலை 1-2.30, 2.30-4, 4-5.30

இந்த இலவச அடிப்படை வகுப்பில் கலந்துகொள்வோர் மட்டுமே MyWay இன் வார அல்லது வார இறுதி வகுப்பில் கலந்துகொள்ளலாம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505



**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி FARM School க்கு பக்கத்தில் உள்ள Lane-ல் 6 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு - 072 2690686
(6744)



**VACANCY**

மிகவும் பேச்சாற்றலுடனும் விவேகத்துடன் தொழிற்படகூடிய "Marketing Executive" தேவை.
கணனி அறிவு முக்கியமாக கொள்ளப்படும் மற்றும் "C# Program Developers" தேவை.

தொடர்புகளுக்கு-AJ SYSTEMS i (PVT) LTD
Phone-0777965596/0776237546
E-mail- info_lk@aj-sys.com
(6742)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.